கோரக்கர்



நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உஸ்மான் சாலை - சென்னை-17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய வைகாசி * மே-14, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு இரண்டு

நம்மைப் பற்றி!



திருமதி சரசுவதி பழநியப்பன் பி.ஏ. அவர்கள் இறை வணக்கம் பாடுகிறார்கள்.

மேன்மைமிகு செட்டிநாட்டரசர் அவர்களுக்கு, புலவர் சி.த. சுப்பிரமணியம் அவர்கள் மாலை அணிவிக்கிறார்கள்.

திருமதி அலமேலு இராமகிருஷ்ணன் எம். எஸ்சி. அவர்களும் உயர்திரு குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களும் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இவை எல்லாம் எங்கே எப்பொழுது நடந்தன?

குழந்தை ஒன்று பிறந்த விழாவில் நடைபெற்றன! அந்தக் குழந்தையைப் பற்றி அறிந்து கொள்ள **11-ம் பக்கம்** பாருங்கள்.

உ

சிவமயம்



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இன்றைய உலகம் மக்களாட்சி உலகம். பெரும்பான்மை யினரின் எண்ணத்தின்படியே செயல்படும் உலகம்.

இந்த உலகத்தில் மக்களின் ஒருமித்த குரலுக்குத்தான் வலிமை இருக்கிறது ; செவிசாய்க்கப்படுகிறது. அந்த ஒற்றுமைக் குரலுக்கு ஏற்ற சாதனம், சிறந்த அமைப்பு, சங்கங்கள் என்ருல் மிகையாகாது.

நற்பணிகளையும், பொதுப் பணிகளையும் செய்கின்ற நல்வாய்ப் புக்கள் மிகுதியாகச் சங்கங்களுக்கே உரியன.

இந்த முறையில் நம் மரபினரின் நலம் காக்க உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் சங்கங்கள் பல இயங்கி வருகின்றன. அதனை ஒட்டி, தென்ஞர்காடு மாவட்ட நகரத்தார்கள், சங்கம் ஒன்றைச் சிதம்பரத்தில் தொடங்கியுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இச்சங்கம், தோன்றிய சங்கங்களுக்குத் துணையா கவும், இனி, பல சங்கங்கள் தோன்ற நல்லதொரு வழிகாட்டி யாகவும் அமையும் என்று நம்புகிரேம்.

இச்சங்கம் நற்பணிபுரிந்து நாளும் வளரவேண்டுமென்று வாழ்த்தி வரவேற்கின்ரேம்.

வேண்டுகோள்

இன்று நம் மரபினர் பல தொழில்கள் புரிகின்றனர். நம்மவர்களிடம் இல்லாத தொழிலே இல்லை எனலாம். அத்தொழில்கள் வளர, நம் மரபினரின் ஆக்கமும், ஊக்கமும், ஒத்துழைப்பும் இன்றியமையாது வேண்டற்பாலது. எடுத்துக்காட்டாக, பாடப் புத்தகங்கள் வெளியிடுகின்ற நிறுவனங்கள் பலவற்றை நம் மரபினர் நடத்தி வருகின்றனர். அவர்கள் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட தரமான பல பாட நூல்களை வெளியிடுகின்றனர். நம் மரபினர் நடத்தும் பள்ளிகளில் அந்நூல்களைப் பாடமாக வைத்து ஆதரவு தர வேண்டுகின்றோம்.

அஞ்சலி

அன்புடையார், அருளுடையார் ஆற்றல் பல உடையார்
அரசியலும் உடையாராய் ஆதல் மிக அரிது!
இவ்விதிக்குப் புறம்பாக இன்முகத்துக் காந்தி வந்தார்
பொன்மனத்துக் காந்திவழி பூமனத்து ஜாகிர்(உசேன்) வந்தார்
கல்வி என்ற கண்ணுடையார், கருணை என்ற மனமுடையார்,
ஒற்றுமையாம் உருவுடையார், உயர்வான சொல்லுடையார்
தெள்ளரிய கல்வியே தீதற்ற செல்வமென்று
முழுமையாய் உணர்ந்த மைந்தர்
ஜமாலியா கல்லூரி தன்னைக் கண்டு
சரித்திரத்தில் பேரிடத்தைப் பெற்ற செல்வர்
நாட்டிற்குக் குடியரசுத் தலைவர் ஆனார்
நாம் மகிழ்ந்தோம், நானிலமே மகிழ்ந்ததன்றோ!
எல்லாரும் அவர் சொத்து என்றிருக்க
எட்டடியே போதுமென அவர் மறைந்தார்
கல்விக்கே வாழ்க்கைதனைத் தந்த மைந்தர்
கல்வி ஆலயத்தை உடல் தழுவ ஒளியாய் நின்றார்
உத்தமர்க்கு அஞ்சலியை உரிமையாக்கி
உயர்ந்தவரின் வழிபோற்றி நாம் நடப்போம்.

வாழ்த்துக்கள்

நகரத்தார் திங்கள் இதழ் நோக்கங்கள் நிரம்பவும் சிறப்பாக உள்ளன. நம் இனத்தாருக்கு நிச்சயம் நன்மைதரும்.

25-4-69,
பசுமலை, மதுரை.

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

"நகரத்தார்" என்ற திங்கள் இதழ் வெளியீட்டுவிழா சிறப்பாக நடைபெறவும், இதழ், நகர மக்கள், நாட்டு மக்கள் அனைவருக்கும் அறத்தாறு பல்லுயிரோம்பி இன்பம் பயக்கும் சிறப்பினை இயம்பி, ஏற்று அரும்பி மணமிக்க மலராகப் பரிமளிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

25-4-69,
சென்னை.

ஆ. நாகப்ப செட்டியார்

It gives me very great pleasure to wish that the new monthly 'Nagarathar' grow in circulation and bright and brilliant future.

23-4-69,
Madurai.

RM. AR. SUBRAMANIAN CHETTIAR

நீண்ட நாட் கனவு நனவாகிறது. 'நகரத்தார்' இதழ் வெளிவருவது பெரு மகிழ்ச்சிதரும் செய்தியே.

24-4-69,
நெற்குப்பை.

"சோமலெ"

வாழ்ந்து, வலிமை குன்றிவரும் ஓரினம், வீறு கொண்டு விசை பெற்று, விழி பெற்று பொலிவு கொள்ள இத்தகு இதழ் வேண்டும். தொடங்கியவர்களின் சீரிய தொண்டைப் பாராட்டுகிறேன்.

22-4-69, வெ. சு. அழகப்பன், எம். ஓ. எல்.
மேலைச்சிவபுரி.

மன்னர் பின்னோராகிய நகரத்தார்களின் மொழி, கலை, தொழில், நாகரிகம், பண்பாடு, அறிவு, ஆக்கச் செயல்கள், அறக் கொடைகள், பொதுப்பணிகள் ஆகியவற்றின் மாண்பினை விளக்கும் "நகரத்தார்" இதழ் தொடங்கியிருக்கும் செய்தி அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். நாளும் நல்ல புகழ் வளர்த்து நனி செழித்திட வாழ்த்துகிறேன்.

21-4-69, சுப. திண்ணப்பன், எம்.ஏ., எம்.லிட்
அண்ணாமலைநகர்.

நகரத்தார் வளர்க்க நினைக்கும் குறையாத செல்வம்போல 'நகரத்தார்' இதழும் குறைவில்லாது வளர வாழ்த்துகிறோம்.

25-4-69, ஆறு. அழகப்பன், எம். ஏ., எம். லிட்
அண்ணாமலைநகர்.

தொண்ணூற்று ஆறூரும் துரிதமாய்ச் சென்றடைந்து
திரை கடலும் தாண்டித் திக்கெல்லாம் சஞ்சரித்து
நகரத்தார் நலம் காண நல்ல மலர் பூத்ததுவும்
காயாகிக் கனியாகி கனிமரமாய் வளர்ந்திடவே.

13-5-69, அருட்கவி சுப. மாணிக்கவாசகன்
மதுரை.

நகரத்தார் இதழ் — நலம் பெற்று, நம் வளம் காத்திட வாழ்த்துகிறேன்.

25-4-69, சோம. இயற்பகைச் செட்டியார்
புதுப்பட்டி.

நகரத்தார் இதழ் ஆலவிருட்சம்போல் தழைத்து இனிதோங்க, திருச்சிற்றம்பலவன் மலரடிகளை வணங்குகின்றேன்.

24-4-69, பழ. மாணிக்கம்
கடலூர்.



[தமிழாகி நின்று, நம் தவமாகி நின்று அருள் சுரக்கும் பழநித் தண்டாயுதபாணியின் அலங்காரத் திருவுருவப் படத்தை இந்த இதழ் அட்டையில் வெளியிடுவதில் பெருமிதம் கொள்கின்றோம். அவர் புகழ் கூறும் இப்பாடலுக்கு, இசை அமைத்துச் சிறப்பு நிகழ்ச்சிகளில் இசைத் தென்றல் உயர்திரு டி. எம். சௌந்தர ராஜன் அவர்கள் பாடி வருகிறார்கள். பாடலாசிரியர் நம் இதழாசிரியர்.]

ஆறுபடை வீடுடையாய்
ஆண்டி என்னும் பேர்உடையாய்
விந்தையடா முருகா! பெரும் விந்தை!
ஒரு மனைவிக்கு இரு மனைவி
உன்னை நம்பி இருக்கின்றார்
தந்தை உண்டு தாய் உண்டு
தக்க தொண்டர் பலர் உண்டு
ஆண்டிக் கோலம் நீ கொண்டால்
யார் அதனை நம்பிடுவார்.

பழநிமலைமேலே பண்டார மாய்நின்றாய்
பக்தருக்குச் செல்வம் எங்கிருந்து நல்குகின்றாய்

சூரனைக்கொன்ற வேலா பார்முழுதும் உன்னதன்றோ
யார் உன்னை என்ன சொன்னார் ஆண்டியாய் ஆனதேனோ

விந்தையான காரியங்கள் செய்கின்ற வேல்முருகா
சொந்த மென்று எங்களுக்கு உன்னையன்றி யாருமில்லை
வந்தனைகள்கூறி வாழ்த்தி வணங்குகின்றோம்
சிந்தைதனில் துன்பம் சேராச் சிறந்த வாழ்வுநல்கிடுவாய்

தண்டாயுதபாணி வழிபாட்டின் பெருமை


நகரத்தார்கள் அனைவரும் சைவராக இருந்தும் வெளி நாடுகளில் அவர்கள் சிவபெருமானைவிடத் தண்டாயுதபாணிக்கே மிகுதியாகக் கோவில் கட்டியும், விழா எடுத்தும் வருகின்றனர். இதற்குக் காரணம் சிவாலயங்கள் சிவ ஆகம விதிப்படி நிறுவப்பட்டு அவ்வாறே சிவபெருமான் வழிபடப் பெற வேண்டும். அந்த ஆகம முறைகளை வெளி நாடுகளில் கடைப்பிடிக்க இயலாது. முறை தவறி நடக்க நேரின் ஏற்படும் அபசாரத்துக்கு—சிவ அபசாரத்துக்கு — நிவர்த்தி செய்ய வழியில்லை. தொழில் செய்யும் தொலை தூரங்களில் நியம நிஷ்டையுடன் இருப்பதிலுள்ள இன்னலை நகரத்தார்கள் உணர்ந்திருப்பதிலிருந்து அவர்களுடைய அடக்கமும் பக்தியுணர்ச்சியும் புலனாகும்.

மன்னிக்கும் தன்மை தண்டாயுதபாணிக்கு உண்டு. தாங்கள் செய்யக்கூடிய சிறு தவறுகளை மறந்து மன்னித்துத் தங்களை வாழ வைக்க வேண்டும், என்பதைக் கருத்திற் கொண்டு, இவர்கள் சிறப்பிடம் தந்துள்ளனர். கோவில் கட்டுவதற்கு முன் அல்லது கோவில் கட்ட இயலாத சிறு ஊர்களில் தண்டாயுதபாணி படத்தை வைத்து வழிபடுவதே வழக்கம்.

முருகன் என்றும் தண்டாயுதபாணி என்றும் சுப்பிரமணியர் என்றும் தமிழ் மக்கள் போற்றும் இறைவனை வட இந்தியாவில் பிரபலப்படுத்தியவர்கள் நகரத்தார்கள் ஆவர். கல்கத்தாவில் ஒரு பெரிய அறிஞர் நகரத்தார் தொடர்பால் தமிழ்மொழி பயின்று, சுநீதி குமார் சாட்டர்ஜி என்ற தம் பெயரை "நன்னெறி முருகன்" என்று ஆக்கிக் கொண்டிருக்கிறார்.

சுப்பிரமணியருக்கு எத்தனை பெயர்கள் உண்டோ அத்தனை பெயர்களும் செட்டியார் சமூகத்தில் வழங்கக் காணலாம். நகரத்தார்கள் வாழும் சில ஊர்களில் ஏற்கனவே சிவன் கோவில்கள்—சிவகங்கை ஜமீன்தார் முதலியவர்களால் கட்டப்பட்டிருந்தன. அவ்வூர்களில் நகரக் கோவில் கட்ட முடிவு செய்தபோது நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்கே கோவில் கட்டியுள்ளனர். கல்லுப்பட்டி, கூழிபிறை, கோனாபட்டு, நெற்குப்பை ஆகிய ஊர்களிலும் உலகம்பட்டி ஞானியார் மடத்திலும் நகரத்தார்கள் சுப்பிரமணியர்க்குக் கோவில்கள் அமைத்துள்ளனர். —'கண'

[ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலரிலிருந்து தகவல் தந்தவர் காரைக்குடி உயர்திரு எஸ். அண்ணாமலை அவர்கள்.]



நகரத்தார் முதல் இதழை உயர்திரு செட்டிநாட்டரசர் அவர்கள் வெளியிட உயர்திரு ஓ. எம். எஸ்பி. எல். ஏஆர். அருணுசலம் செட்டியார் அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்கின்ருர்கள்.

தொழில் பெருந்தகையாளரான உயர்திரு எம். வி. அருணுசலம், பி.எஸ்சி. (ஆனர்ஸ்) அவர்கள் வாழ்த்துரை வழங்குகிருர்கள்.



தண்டாயுதபாணி வழிபாட்டின் பெருமை


நகரத்தார்கள் அனைவரும் சைவராக இருந்தும் வெளி நாடுகளில் அவர்கள் சிவபெருமானைவிடத் தண்டாயுதபாணிக்கே மிகுதியாகக் கோவில் கட்டியும், விழா எடுத்தும் வருகின்றனர். இதற்குக் காரணம் சிவாலயங்கள் சிவ ஆகம விதிப்படி நிறுவப்பட்டு அவ்வாறே சிவபெருமான் வழிபடப் பெற வேண்டும். அந்த ஆகம முறைகளை வெளி நாடுகளில் கடைப்பிடிக்க இயலாது. முறை தவறி நடக்க நேரின் ஏற்படும் அபசாரத்துக்கு— சிவ அபசாரத்துக்கு — நிவர்த்தி செய்ய வழியில்லை. தொழில் செய்யும் தொலை தூரங்களில் நியம நிஷ்டையுடன் இருப்பதிலுள்ள இன்னலை நகரத்தார்கள் உணர்ந்திருப்பதிலிருந்து அவர்களுடைய அடக்கமும் பக்தியுணர்ச்சியும் புலனாகும்.

மன்னிக்கும் தன்மை தண்டாயுதபாணிக்கு உண்டு. தாங்கள் செய்யக்கூடிய சிறு தவறுகளை மறந்து மன்னித்துத் தங்களை வாழ வைக்க வேண்டும், என்பதைக் கருத்திற் கொண்டு, இவர்கள் சிறப்பிடம் தந்துள்ளனர். கோவில் கட்டுவதற்கு முன் அல்லது கோவில் கட்ட இயலாத சிறு ஊர்களில் தண்டாயுதபாணி படத்தை வைத்து வழிபடுவதே வழக்கம்.

முருகன் என்றும் தண்டாயுதபாணி என்றும் சுப்பிரமணியர் என்றும் தமிழ் மக்கள் போற்றும் இறைவனை வட இந்தியாவில் பிரபலப்படுத்தியவர்கள் நகரத்தார்கள் ஆவர். கல்கத்தாவில் ஒரு பெரிய அறிஞர் நகரத்தார் தொடர்பால் தமிழ்மொழி பயின்று, சுநீதி குமார் சாட்டர்ஜி என்ற தம் பெயரை "நன்னெறி முருகன்" என்று ஆக்கிக் கொண்டிருக்கிறார்.

சுப்பிரமணியருக்கு எத்தனை பெயர்கள் உண்டோ அத்தனை பெயர்களும் செட்டியார் சமூகத்தில் வழங்கக் காணலாம். நகரத்தார்கள் வாழும் சில ஊர்களில் ஏற்கனவே சிவன் கோவில்கள்— சிவகங்கை ஜமீன்தார் முதலியவர்களால் கட்டப்பட்டிருந்தன. அவ்வூர்களில் நகரக் கோவில் கட்ட முடிவு செய்தபோது நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்கே கோவில் கட்டியுள்ளனர். கல்லுப்பட்டி, கூழிபிறை, கோனாபட்டு, நெற்குப்பை ஆகிய ஊர்களிலும் உலகம்பட்டி ஞானியார் மடத்திலும் நகரத்தார்கள் சுப்பிரமணியர்க்குக் கோவில்கள் அமைத்துள்ளனர். —'கண'

[ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலரிலிருந்து தகவல் தந்தவர் காரைக்குடி உயர்திரு எஸ். அண்ணாமலை அவர்கள்.]



நகரத்தார் முதல் இதழை உயர்திரு செட்டிநாட்டரசர் அவர்கள் வெளியிட உயர்திரு ஓ. எம். எஸ்பி. எல். ஏஆர். அருணாசலம் செட்டியார் அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்கின்றார்கள்.

தொழில் பெருந்தகையாளரான உயர்திரு எம். வி. அருணாசலம், பி.எஸ்சி. (ஆனர்ஸ்) அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.





உயர்திரு ஏ. ஆர்எம். ஏ. எல். ஏ. எல். அருணாசலம் செட்டியார் மகன் திருவளர்செல்வன் முத்துவீரப்பனுக்கும் உயர்திரு எஸ்கே. பிஎல். எஸ். பிஎல். நாச்சியப்ப செட்டியார் மகள் திருவளர்செல்வி நாகம்மை என்ற சரோஜாவுக்கும் தேவகோட்டையில் 7-5-69ஆம் நாள் திருமணம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. மணமக்களுக்கு நகரத்தாரின் நல்வாழ்த்துக்களை உரிமையாக்குகின்றோம்.

நகரத்தார் திங்கள் இதழ் வெளியீட்டு விழாவில் பெருந்தகையாளர் உயர்திரு ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள் தலைமையுரையாற்றுகிறார்கள். உயர்திரு செட்டிநாட்டரசர் அவர்களும், பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும் அருகில் அமர்ந்திருக்கிறார்கள்.





பொதிகையிலே பிறந்தாள் பூம்பொழில்களிலே தவழ்ந்தாள்
மலர்மேவும் பனிநீரில் குளித்து மகரந்தப் பொடிபூசி
திருமேவும் நகர் புகுந்தாள் தென்றல் மகள்
அவள்புகுந்த நகர் எந்த நகரோ?
மலைமீது பிறந்தாள் குதித்தாள் சிரித்தாள்
வையை எனப்பெயர் பெற்ருள் வாழ்வுதர ஓடிவந்தாள்
நேரிழையார் நீராட நெற்கதிர்கள் முத்தமிட
வாழை மகள் வரவேற்க வண்ணமலர் தேன்சொரிய
வந்த மகள் புகழ் பெற்ற தெந்த நகர்?
கல்தோன்றும் முன்னே கவியாகப் பிறந்தமகள்
சொல்தோன்றும் முன்னே சுவையாக வந்தசெல்வம்
நாமீது நடமாடி நலமாகி நம்மை ஆளாக்கும் அருட்தெய்வம்
மொழிக்கெல்லாம் முதலாகி முத்தமிழாய் வந்த அன்னை
தரணிஎங்கும் வாழ்ந்தாலும் தனிப் பெருமைபெற்ருலும்
தனக்கென்று வாழ்ந்த நகர் எந்த நகர்?
நாடுஎங்கும் ஊர்கள் தோறும் நலம்பயக்கும் கோயிலுண்டு
ஆனுலும் பெண் தெய்வம் ஆட்சிபெற்ற தெந்தநகர்?
தென்றல் புகுந்தநகர் வையைநதி வாழும்நகர்
அன்னைத் தமிழ் அரியணையை ஏற்றநகர்
பெண்தெய்வம் பெருமை தனைப் பெற்றநகர்
மாடங்கள் விளங்குகின்ற மாமதுரை நகர்அன்ருே?
முத்தான மதுரைக்கு எத்தனையோ பெருமைஉண்டு
ஆனுலும் அழகுத் திருமதுரை தொழில்மதுரையாக

ஆலயத்துச் சங்கோடு ஆலைகளின் சங்கொலிக்க
மேகங்கள் போதாதென்று மேவிடும் மேகம்போல
ஆலைவிடும் புகைஎழும்பி விண்ணைச் சேர
ஆக்கியவர் யார்? வறுமை போக்கியவர் யார்?
நல்வணிகர் நகரத்தார் நம்மண்ணை விட்டகன்றார் என்றுஎண்ணி
திருவாரூர் ஆலயத்துத் தியாகராசர் அன்புகொண்டு
தேடிவந்து மதுரைநகர் மேவி
ஆலையகத்துத் தியாகராசர் ஆனார்என்றால் மிகைஉண்டோ?
ஆலயத்து வீற்றிருக்கும் அங்கயற்கண்ணிக்கு
ஆலையொன்று கண்டார் நம்தியாகராசர்-பின்
அடுக்கடுக்காய் ஆலை பல கண்டார்
நூல் ஆயும் திறம்மிக்கார்-தமிழ்
நூல் ஆயும் குணம் உடையார்
அன்னை பசித்திருக்க அறம்செய்யும் மகனைப்போல்
தாய்மொழியை மதியாது தத்துவந்த மொழிமதிக்கும்
தகுதியற்றார் செயலதனைத் தயங்காமல் எதிர்த்திடுவார்
மொழிகற்கும் பண்போடு தொழில் கற்கவேண்டுமென
கலைக்கும் பொறியியற்கும் கல்லூரி தனைக்கண்டார்
உழைப்பார், உயர்வார், சிறப்பார், ஐயமில்லை என்பதற்கு
நல்லதொரு உவமையாய் நம்தந்தை வாழுகிறார்
தொழில் தந்தை தூய நல்ல பணித்தந்தை
தந்தையர்குத் தந்தை தகுதிமிகு கலைத்தந்தை
அன்னவரைப் போற்றி அயராதுநாம் உழைத்து
தென்றல் தவழும் திருமதுரைபோல் வாழ்வோம்!

கலைத் தந்தை தொழில்பெருந்தந்தையாக விளங்குகின்ற சிறப்பினை ஆடி இதழில் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் உயர்திரு டாக்டர் சுப. அண்ணாமலை M. A., M. Litt. Ph. D. அவர்கள் எழுதுகின்றார்கள்.

குழந்தை பிறந்தது

கலைமகளும் திருமகளும் கைகோத்து அருள்சுரக்கும் மரபு நம் மரபு. அத்தகைய மரபினர் தங்கள் நீண்ட பெரிய வரலாற்றில் பொன்னான நாட்கள் பலவற்றைச் சந்தித்திருக்கிறார்கள்.

அந்த வரலாற்றில் மீண்டும் ஒரு பொன்னான நாளாக சௌமிய சித்திரை பதினான்காம் நாள் (26—4—69) விளங்கியது. அந் நன்னாளில்தான் ‘நகரத்தார்’ திங்கள் இதழ் பிறந்தது.


அரசர்களுக்கு முடிசூட்டி வாழ்ந்த மரபினருக்காகத் தோன்றியுள்ள இதழ் என்பதனால்தானோ என்னவோ அரண்மனைக்காரத் தெருவில் உள்ள கோகலே மன்றத்தில் விழா நடைபெற்றது.

நீதியின் நிலைக்களமான திருக்குறள் அகரத்தை முதலாகக் கொண்டு தொடங்குதல் போல பெருமையை நிலைக்களமாகக் கொண்ட மரபினருக்காகத் தோன்றிய திங்கள் இதழின் வெளியீட்டு விழா அந்தக் குறளையே துவக்கமாகக் கொண்டு தொடகியது.

திருமதி சரசுவதி பழநியப்பன் பி. ஏ., அவர்கள் இறை வணக்கம் பாடினார்கள்.

சிறப்பு மிகுந்த அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெருமக்களை நகரத்தார் இதழின் பரிந்துரையாளர் திரு. எஸ். பிஎல். பழநியப்பா பி.ஏ., பி.எல்., அவர்கள் வரவேற்றார்கள். “தொண்ணூற்றாறு ஊர்களில் வாழ்ந்த நம் மரபினர் இன்று உலகெங்கும் வாழ்ந்து வருகிறார்கள். கொண்டு விற்று வாழ்வதையே குலத்தொழிலாகக் கொண்டிருந்த நாம், இன்று அத்தொழில் மட்டுமன்றிப் பல்வேறு

தொழில்களில் தொடர்பு கொண்டு வருகிறோம். பல துறைகளிலும் பணியாற்றி வருகிறோம். எனவே, நமக்கு என்று ஓர் இதழ் வேண்டும் என்ற கருத்தால் நாங்கள் இதனைத் தொடங்கியுள்ளோம். இதனைத் தொடங்கச் செய்தவர்கள் செட்டிநாட்டு அரசர் அவர்களே ஆவார்கள். அவர்களே மனமுவந்து முதல் இதழை வெளியிடுவதற்கு வந்துள்ளார்கள்'' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு அரசர் அவர்களையும் தலைமை தாங்க வந்திருந்த பெருந்தகையார் உயர்திரு. ப. வ. ராம. குழந்தையஞ் செட்டியார் அவர்களையும், வாழ்த்துரை வழங்க வந்திருந்த பெருமக்களையும் மற்றும் அனைவரையும் அவர்கள் வரவேற்றார்கள்.



பரிந்துரையாளர் பழநியப்பா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள். அமர்ந்திருப்பவர்கள். திருமதி அலமேலு இராமகிருஷ்ணன் எம். எஸ்சி. அவர்கள், உயர்திரு குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள், உயர்திரு எம். வி. அருணாசலம் பி. எஸ்சி. (ஆனர்ஸ்) அவர்கள், உயர்திரு ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள். உயர்திரு செட்டிநாட்டரசர் மு. அ. முத்தையா செட்டயார் அவர்கள்: உயர்திரு பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

உயர்திரு ப. வ. ராம. குழந்தையஞ் செட்டியார் அவர்கள் தலைமையேற்று உரையாற்றிய பொழுது, ''இன்று 'நகரத்தார்' என்ற குழந்தை பிறந்திருக்கிறது. அந்த விழாவில் ஒரு குழந்தை தலைமை தாங்க வேண்டும் என்று கருதித்தான் தலைமை தாங்குகின்ற பொறுப்பை என்னிடம் தந்துள்ளார்கள் என்று எண்ணுகிறேன்'' என்று கூறினார்கள். மேலும் அவர்கள் பேசுகையில்,

''நகரத்தார் பல்வேறு பெருமைகளுக்குரியவர்கள்'' என்று குறிப்பிட்டார்கள். அம் மரபினர், என்றும் முதல் வைத்துத்தான் தொழில் நடத்துவார்கள். அதனால்தான் கொண்டு விற்பவர்கள் (ஒரு பொருளைக் கொண்டு தொழில் செய்பவர்கள்) என்ற பெயரைப் பெற்றார்கள். நம்மவர்களுக்குரிய தலையாய சிறப்பு நாணயமே ஆகும். அது குறைந்து போய்விடாமல், மறைந்து போய் விடாமல் காப்பது நமது கடமை'' என்று கூறினார்கள்.

பின்னர் நகரத்தார் முதல் இதழை வெளியிடுமாறு செட்டி நாட்டு அரசர் அவர்களை வேண்டினார்கள்.

அரசர் அவர்கள் இதழை வெளியிட்ட பொழுது ''மரபுகளுக்காகப் பத்திரிக்கைகள் இருப்பது தவறில்லை. அது மிகவும் இன்றியமையாததாகும். அதனால்தான் நம் மரபுக்கென்று ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்குமாறு நான் கூறினேன். நான் அப்படிச் சொன்னபொழுது சற்றுப் பெரிய அளவில் நான்கு பக்கங்களில் சாதாரணமான நிலையில் செய்தி ஏடு போல வெளியிடுவார்கள் என்றே எண்ணினேன். ஆனால், இதழ் செம்மையாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளது. அப் பொறுப்பினை நல்ல முறையில் நிறைவேற்றிய பழநியப்பாவுக்கும், நாகசண்முகத்துக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் எல்லாரும் இந்த நல்ல முயற்சிக்குத் துணையாக இருந்து அது மேலும் மேலும் வளர உதவ வேண்டும். நாம் அனைவரும் நம் மரபின் நலத்திற்காக ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிடமாவது செலவிட வேண்டும். அதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்ட அவர்கள் நிறைந்த மகிழ்ச்சியோடு முதல் இதழை வெளியிட்டார்கள். அதை மதிப்பிற்குரிய உயர்திரு ஓ. எம். எஸ்பி. எல். ஏஆர். அருணாசலம் செட்டியார் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். அந்த இதழுக்காக அவர்கள் 101 ரூபாய் தந்து வாழ்த்தினார்கள்.

பின்னர், தொழில் பெரும் குடும்பத்தைச் சேர்ந்த உயர்திரு. எம். வி. அருணாசலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். ''நகரத்தார் திங்கள் இதழ் நல்ல அறிகுறியோடு வெளிவந்திருக்கிறது என்று எண்ணுகிறேன். நம் மரபினர் எதைத் தொடங்கினாலும் பிள்ளையார்சுழி போட்டே தொடங்குவார்கள். முதல் இதழ் அட்டையில் விநாயகர் இடம்பெற்றிருப்பது சிறப்பானதாகும். நம் மரபினர் எதைச் செய்தாலும் செம்மையாகவே செய்வார்கள். அதற்கு எடுத்துக் காட்டாக இது விளங்குகிறது. பத்திரிக்கை நடத்துபவர்கள் இது போன்ற பண்பாடான படங்களையே வெளியிடுவார்கள் என்று நம்புகிறேன்.'' என்று கூறிய

அவர்கள் "நம்மரபினர் காலம் போற்றி, ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் பணியாற்றி, சிறப்பான எதிர்காலத்தைப் பெற வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, உயர்திரு லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினுர்கள். "செட்டிநாட்டரசர் அவர்கள் மிகுந்த கைராசி உள்ளவர்கள். அவர்கள் தொடங்குகின்ற எல்லாம் என்றும் சீரோடும் சிறப்போடும் விளங்கும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இன்று பெரும் புகழ்பெற்று விளங்கும் ஜெமினி ஸ்டுடியோவைத் துவக்கி வைத்தவர்கள் நம் அரசர் அவர்கள்தான் என்று கூறியவர்கள், நகரத்தார் இதழ் பற்றிக் குறிப்பிடுகையில், "இது மிகச் சிறந்த முயற்சியாகும். நல்ல உழைப்பும் ஆர்வமும் நிறைந்த பழநியப்பாவிடமும் நாகசண்முகத்திடமும் இப் பணியிணைச் செய்யுமாறு அரசர் அவர்கள் கூறியது மிகுந்த பொருத்தமுடையது. நம் மரபினர் காசி முல்த கன்னியாகுமரி வரை எண்ணற்ற அறங்களைச் செய்திருக்கிருர்கள். அது பற்றிய தெளிவான விவரங்களெல்லாம் இந்த இதழில் வர வேண்டும்" என்று குறிப்பிட்டு, செட்டிநாட்டு அரசர் அவர்கள் குடும்பம் செய்த அறங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் பேசுகையில், "நாணயம் என்பது 'நாநயம்'தான். அதாவது சொல்லில் உறுதி உடையவர்கள் என்பதையே அது குறிக்கிறது" என்பதை அழகாகக் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, உயர்திரு எம். வி. எம். அழகப்பன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினுர்கள். "மரபுகளுக்காக ஏடுகள் வேண்டும் என்று அரசர் குறிப்பிட்ட கருத்து மிகவும் சிறப்புடையதாகும். நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் நம் கருத்துக்களைத் தெளிவாகவும் திட்டமாகவும் வெளியிடவும் ஓர் இதழ் இன்றியமையாததாகும். எனவே, என் நண்பர்கள் தொடங்கியுள்ள இந்த நல்ல முயற்சியை நான் பேரார்வத்துடனும் அன்புடனும் வரவேற்கிறேன். பத்திரிக்கை பலம் பொருந்திய ஒரு சக்தியாகும். அதை நாம் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நான்கூட, திரைப்படத்துறையை அடிப்படையாகக் கொண்டு மிக விரிவான திட்டங்களோடு 'Gay World' என்ற ஆங்கிலத் திங்கள் இதழைத் தொடங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம் மரபினரின் எதிர்காலம் இளைஞர்களின் கையில்தான் இருக்கிறது. ஆனுல் அவர்களில் பெரும்பாலோர் உழைப்பில் முழு ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிருர்கள் என்று சொல்வதற்கில்லை. இந்த நிலை மாறவேண்டும். அவர்கள் அனைவரும் உழைப்பை மதித்துப் போற்றித் துதித்து முன்னேற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, திருமதி அலமேலு ராமகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். நகரத்தார் மரபுப் பெண்களின் ஒருமித்த குரலாகவே அவர்கள் உரை அமைந்தது. ''நம் மரபினர் தலை சிறந்த எல்லாத் துறைகளிலும் சிறப்பான இடம் பெற்று விளங்குகிறார்கள்'' என்று குறிப்பிட்டு, ஒவ்வொரு துறையிலும் தொழிலிலும் இருக்கின்ற பெருமக்கள் பற்றி நினைவுகூர்ந்தார்கள். ''செட்டி நாட்டுப் பெண்களுக்குக் கணக்குத் தெரியாது என்று சொல்வது சரியல்ல. அவர்களுக்குச் சாதாரண இலக்கங்கள் தெரியா விட்டாலும் ஆயிரம் இலக்கம் நன்றாகத் தெரியும். விராகன் கணக்கு மிக நன்றாகத் தெரியும். பொருள்களின் உபயோகத் திற்குத் தகுந்தபடி வருமான வரிச் சட்டத்தில்கூட வரிச்சலுகை உண்டு. நம் சமூகத்தில் படித்த பெண்களுக்குச் சீதனம், சீர்முறை வரிசைகளில் படிப்பின் தரத்தைப் பொறுத்தாவது சலுகை காட்டக் கூடாதா?'' என்று உருக்கமாகக் கேட்டார்கள்.


''நகரத்தார் இதழ், பெண்கள் முன்னேற்றத்திற்குரிய செய்திகளை வெளியிடுவதுடன், பல தொழில் நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புக்கள் பற்றியும் வெளியிட வேண்டும். தற்காலத்தில் விவசாயம் மிகவும் இன்றியமையாதது. விவசாயிகளைப் பற்றிய செய்திகளும் குறிப்புக்களும் இதில் விரிவாக இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, குழந்தைக் கவிஞர் உயர்திரு அழ. வள்ளியப்பா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

''குழந்தையன் செட்டியார் அவர்கள் தொடங்கிய விழாவை, குழந்தைக் கவிஞர் முடித்துவைக்க வேண்டும் என எண்ணி என்னை கடைசியாகப் பேசச் சொல்லி இருப்பார்கள் என்று நினைக்கிறேன்'' என்று குறிப்பிட்ட கவிஞர் அவர்கள், மனிதன் தன் வாழ் நாளிலேயே நல்ல காரியங்களைச் செய்துவிட வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் கூறினார்கள். அதனை விளக்குகையில், ''யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்று சொல்வார்கள். பாம்பின் தோல்கூடப் பயன்படுகிறது. ஆனால் மனிதன் தோல் செருப்புக்குக்கூடப் பயன்படுவதில்லை'' என்று குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் உரையாற்றுகையில் ''நகரத்தார்'' இதழின் சிறப்பினை விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துக்கூறி அனைவரும் அதன் உறுப்பினராகி ஊக்குவிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

தலைவர் உயர்திரு ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள் தம்முடைய பின்னுரையில் வாழ்த்துரை வழங்கியவர்களின் உரைகளிலிருந்து இன்றியமையாத செய்திகளைக் குறிப்பிட்டுச் சிறப்பித்தார்கள். பிறகு, ''நகரத்தார்'' இதழ் பற்றிக் குறிப்பிட்டார்கள். ''இந்த இதழ் தொடர்புடையவர்கள் ஒருநாள் இது பற்றிப் பேசுவதற்காக வள்ளியப்பா அவர்களோடு என்னை வந்து சந்தித்தார்கள். அவர்களுடைய முயற்சியைப் பாராட்டிய நான் இது இலாப நோக்கத்தில் செய்ய இயலாதது. தொண்டு உள்ளத்தோடு தான் செய்ய வேண்டும். விளம்பரம், உறுப்பினர் கட்டணத்தைக்

கொண்டுதான் இதழ் நடக்க வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர்களும் அந்த நோக்கத்தில்தான் ஆரம்பித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன் என்று குறிப்பிட்டார்கள். இந்தத் திங்கள் இதழ் நல்ல முறையில் நடைபெற அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.



ஆசிரியரின் நன்றியுரை

இதழாசிரியர் புலவர் உயர்திரு நாகசண்முகம் அவர்கள் நன்றி உரை கூறினார்கள்.

''தெய்வக் குழந்தை, இலக்குமி, தமிழன்னை, இளைஞர்கள், அலமேலுமங்கை, குழந்தைக் கவிஞர்கள் ஆகியவர்கள் வந்து வாழ்த்தியது போல தலைவரும், வாழ்த்துரை வழங்கியவர்களும் வந்து சிறப்பித்தார்கள். அரசன் ஆணைக்காலை முன்வைத்து நற்காரியங்கள் செய்கின்ற மரபு நம் மரபு. ஆனால் நகரத்தார் குழந்தை பிறந்த விழாவிற்கு நம் அரசர் நேரிலேயே வந்து வாழ்த்தினார்கள். அந்தக் குழந்தையை உயர்திரு ஓ. எம். எஸ்பி.எல்.ஏ ஆர். அருணாசலம் செட்டியார் அவர்கள் அரசர் அவர்களிடமிருந்து வாங்கிச் சிறப்பித்தார்கள். நகரத்தார் இதழ் ஆலயம் போன்றது. நாங்கள் மிகுந்த பயத்துடனும் பக்தியுடனும்தான் அதனை உருவாக்கும் பணியை மேற்கொண்டுள்ளோம். பெருமக்கள் அனைவருடைய அறிவுரைகளையும் கேட்டு அதன்படி செயலாற்றுவோம். நகரத்தார் குழந்தை அதிர்ஷ்டக் குழந்தை. அதனால் அது பிறப்பதற்கு முன்னரே அதன் ஐயாவான செட்டிநாட்டரசரிடம் நகை செய்துகொள்வதற்கு என்று ஆயிரத்து இருநூறு ரூபாயைப் பெற்றுக்கொண்டு பிறந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டு, அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

நகரத்தார் குழந்தை பிறந்த நல்லவிழா, நாட்டு வணக்கத்துடன் இனிது முடிந்தது.

வளம்பெற வாய்ப்புக்கள்

★ **Department of Chemical Technology, University of Bombay, Bombay-19** offers the following degree courses:

(i) B.Sc. (Tech.): Branches–Textile Chemistry; Food Tech; Tech of Intermediates and Dyes; Tech. of Plastics; Tech. of Pigments, Paints and Varnishes; Tech. of Oils, Fats and waxes and Tech. of Pharmaceuticals and Fine Chemicals—Duration: 3 years. Min. Qualfn: II Class B.Sc. with Chemistry and Physics — Seats available: 115

(ii) M. Sc. (Tech) in the above subjects. Duration: Four terms. Min. Qualfn: B. Sc. (Tech) II class.

(iii) M. Chem. Engg. Duration: Four Terms. Min. Qualfn. B. Chem. Engg. II Class.

(iv) Ph. D. (Tech): Min. Qualfn: Master Degree in Che. Engg. or Chem. Tech.

Application forms available from the Director of the Dept. on payment of Re. 1/- in **Cash** or M O. only. Last date

B.Sc. (Tech): 8th June, 1969.

M.Sc. Tech., M. Chem. Engg., Ph. D.: 30th June, 1969.

★ **Institute of Paper Technology, Saharanpur, U.P.**

1. **Diploma Course** (2 years duration)

B.Sc. or equivalent with Chemistry, Physics and Mathematics. A candidate who has passed B.Sc. with Chemistry as main and Physics as subsidiary subject is also eligible for admission provided he has passed Intermediate or equivalent examination with mathematics.

2. **Certificate Course** (3 Year duration)

At least 45% marks in High School or equivalent examination with science and mathematics as two of the subjects.

The application is obtainable from the office of the Institute by 10th June, 1969 on payment of Rs. 2/- only in the shape of Crossed Indian Postal Order payable to the Principal, Institute of Paper Technology, Saharanpur, U.P. The application duly completed must reach the office of the Institute latest **by 5th July, 1969.** A limited number of scholarships, stipend, freeship and half freeships are available in both the courses.

★ **Tata Institute of Social Sciences, Sion-Trombay Road, Chembur, Bombay-71 AS.**

1. **Master's Degree in Social Work** with specialisation in Criminology and Correctional Administration / Family and Child Welfare / Medical and Psychiatric Social Work / Social Research/Urban and Rural Community Development.

2. **Master's Degree in Personnel Management and Labour Welfare.**

3. **One-Year Certificate in Social Research** (Open to holders of M.A. Second Class in Social Sciences).

4. **Ph. D. Social Work/Social Sciences.** Open to holders of a Second Class Master's Degree in Social Work/Social Sciences. Applications accepted througout the year.

Some scholarships and fellowships available for post M.A. and post Ph.D. Research work.

For the first three programmes, applications are entertained from candidates who have appeared for the examination and are awiting results. Last date for receipt of applications —June 14, 1969. Next session commences on July 1, 1969.

Prospectus and applicaliom form may be obtained from the Registrar on payment of Rs. 4/-.

★ சென்னை மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு, எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். (B.D.S. பல் வைத்தியம்) பி. பார்மஸி பட்டப் படிப்புகளுக்கு மனுச் செய்ய வேண்டிய கடைசி நாள் 11—6—69. மனுக்கள் பெற ரூ. 1/- போஸ்டர் ஆர்டர் மூலம் The Secretary, Selection Committee at Madras Medical College, Madras-3, அனுப்ப வேண்டும். 0–75 காசு தபால் தலை ஒட்டிய 10" × 4" உறையும் அனுப்ப வேண்டும்.

★ மதுரை, கோயம்புத்தூரிலுள்ள விவசாயக் கல்லூரிகளுக்கு B.Sc. (Agri.) பட்டப் படிப்பிற்கு மனுச் செய்ய வேண்டிய கடைசி நாள் 7–6–69. மனுக்கள் பெற ரூ. 1/- போஸ்டல் ஆர்டர், Senior Accounts Officer, Agricultural College, Coimbatore-3 என்ற முகவரிக்கு 30—5—'69 க்குள் அனுப்ப வேண்டும்.

ஆயுள் உறுப்பினர்

நம் இதழுக்கு ஆயுள் உறுப்பினர்களான பெருமக்க ளின் விவரங்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின் ரேம். ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 101 ஆகும்

செட்டிநாட்டரசர்
மு. அ. முத்தையா செட்டியார்,
(செட்டி நாடு)
செட்டி நாடு ஹவுஸ்,
அடையாறு,
சென்னை 20.

பி. வி. ஆர் எம்.
குழந்தையன் செட்டியார்,
(ராயவரம்)
19-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை 34.

அ. மு. மு. அருணசலம் செட்டியார்,
(பள்ளத்தூர்)
3, சித்தரஞ்சன் சாலை,
தேனம்பேட்டை,
சென்னை 18.

எம். வி. அருணசலம்,
(பள்ளத்தூர்)
சாமுண்டீஸ்வரி பாக்,
9, சாந்தோம் நெடுஞ் சாலை,
சென்னை 4.

எம். எம். முத்தையா,
(பள்ளத்தூர்)
சாமுண்டீஸ்வரி பாக்,
9, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 4.

தி. சுந்தரம் செட்டியார்,
(ஆ. தெக்கூர்)
ஸ்ரீ மீனுட்சி மில்ஸ் லிமிடெட்,
திருப்பரங் குன்றம் சாலை,
மதுரை.

வ. செ. சிவலிங்கம் செட்டியார்
(பூலாங்குறிச்சி)
21, ஜட்ஜ் ஜம்புலிங்க முதலியார் சாலை,
சென்னை 4.

வி. பிடி. தியாகராசச் செட்டியார்,
(கண்டனூர்)
1, புரபசர் சுப்பிரமணியம் ரோடு,
கீழ்ப்பாக்கம்,
சென்னை 10.

ஓ.எம்.எஸ்பி. எல். எம்
மெய்யப்ப செட்டியார்,
(தேவகோட்டை)
75, கவிஞர் பாரதிதாசன் தெரு,
ஆள்வார்பேட்டை,
சென்னை 18.

ஓ.எம்.எஸ்பி. எல். ஏ ஆர்.
அருணசலம் செட்டியார்,
(தேவகோட்டை)
19, நீலகண்ட மேத்தா தெரு,
தியாகராயநகர்,
சென்னை 17.

அ. சின்னச் சேவுகன் செட்டியார்,
(தேவகோட்டை)
9, முரேஸ் கேட் சாலை,
ஆள்வார்ப்பேட்டை,
சென்னை 18.

ஓ எம். எஸ்பி. எல். ஏ எல்.
அழகப்ப செட்டியார்
(தேவகோட்டை)
75, சிதம்மா எக்ஸ்டன்ஷன்,
சென்னை-18

ஏ. எல். சீனிவாசன்,
(சிறுகூடற் பட்டி)
14, ரத்தின செட்டித் தெரு,
ராயப்பேட்டை,
சென்னை 14.

எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார்,
(பூலாங்குறிச்சி)
ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ் லிமிடெட்,
அஞ்சல் பெட்டி எண் 901,
சேலம்-9.

சோம. பழநியப்பச் செட்டியார்,
(ராயவரம்)
11, ரட்லன்கேட் இரண்டாவது தெரு,
சென்னை-6.

எஸ். ஆர். சுப்பிரமணியன் செட்டியார்,
(பள்ளத்தூர்)
"லின்டன்டவர்ஸ்"
8, காலேஜ் லேன்,
சென்னை 6.


எம். ஆர். எம். ராமசாமிச், செட்டியார்,
(கொப்பனுபட்டி)
'ராமபவனம்'
14- A, காலேஜ் சாலை,
சென்னை 6.

என்எஸ்.ஏஆர். முத்துக்குமார், பி. இ. ஆனர்ஸ்
(கொ. லட்சுமிபுரம்,)
19, சரவண முதலியார் தெரு,
தியாகராய நகர்,
சென்னை 17.

எம். வி. எம். அழகப்பன், எம். ஏ.
(பள்ளத்தூர்)
14- E, கலிங்கா காலனி,
அசோக் நகர்,
சென்னை 33.

எம். பழனியப்பன் பி. காம் ஆனர்ஸ் எப். சி. ஏ., ஆடிட்டர்
(நெற்குப்பை)
2/54, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை 1.

நகரத் கோயில்கள்



'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன் எம். ஏ.

கோயிலுக்கு வரி செலுத்தும் குடிமக்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஔவைப் பெருமாட்டியின் வாக்கு. இதனை நூற்றுக்கு நூறு பின்பற்றி வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள் எனலாம். ஏனெனில் தாம் குடியிருக்கும் ஊர்தோறும், கோயில் இல்லாக் குறை நீங்கத் தாமே பொருள் சேர்த்துத் தமக்கெனக் கோயில் கட்டிக் கொண்டு வாழ்வது அவர்கள் மரபாகும். முன்பே பிறக்கும் உரிமையான கோயில்கள் இருப்பினும், தாம் நிலையாக வாழும் ஊர்களில் தமக்கென ஒரு கோயில் கட்டிக் கொண்டாலன்றி அவர்கள் மன நிறைவு பெறார். ஔவைப் பெருமாட்டியின் அருள் வாக்கினை இந் நகரத்தார் மரபினர்க்கு ஏற்பச் சிறிது மாற்றிக் கூறுவதெனில், "குடியிருக்கும் ஊர்களில் எல்லாம் கோயில் கட்டி வாழ்க!" என்று உடன் பாட்டு முகத்தாற் கூற வேண்டும்.

இங்ஙனம் தம் செலவிற் கட்டித் தமது ஆட்சிக்குள் வைத்திருக்கும் தமக்கேயுரிய கோயில்களை, இவர்கள் நகரக் கோயில் என அழைப்பர். இத்தகைய நகரக் கோயில்கள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி, செட்டிமார்கள் சேர்ந்து வாழ்ந்த இலங்கை, பருமா, மலேயா, இந்தோசீனு போன்ற நாடுகளிலுள்ள ஊர்கள் பலவற்றிலும் உண்டு. சிறிது காலத்திற்கு முன்புவரை நகரத்தார்கள் வாழும் ஊர்களைத் 'தொண்ணூற்று ஆறு ஊர்'கள் என்பர். இவற்றுட் சில இன்று நகரங்களாக வளர்ந்து வருகின்றனவெனினும், முன்பு இவையனைத்தும் சிற்றூர்களாகவே திகழ்ந்தன.

ஒரு சிற்றூரை எடுத்துக்கொண்டால் அங்குள்ள நகரக்கோயிலே ஆளும் இடமாகவும் அதிலுள்ள இறையே ஆள்பவராகவும் அவ்வூரிலுள்ள 'நகரப் பெருமக்கள்' அனைவரும் அக்கோயிலைச் சார்ந்த குடிமக்களாகவும் கருதப்படும் முறையில் நகரத்தார்களின் 'சிற்றூர்ச் சமூக அமைப்பு' இருப்பதை இங்கு நன்கு தெளிவுப்படுத்த விழைகிறேன். ஊர்தோறும் அமைந்த நகரக் கோயில்களே அவ்வூர் நகரத்தாரை ஒன்றிப் பிணைக்கும் 'ஈர்ப்பு நிலையம்' (Gravitation centre) ஆகும். இதினின்றும் பிரிந்து போகவோ, பிய்த்துக் கொண்டு போகவோ இச் சமூகத்தைச் சேர்ந்த எவராலும் எளிதில் முடிவதில்லை

அங்ஙனம் யாரும் பிரிந்து போனு லும் ஈர்ப்பு ஆற்றல் மண்டலத்தை விட்டுப் பிரிந்த விண் மீன் ஒன்று எரிந்து விழுந்து அழிந்து விடுவது போன்ற நிலைமையே ஏற்படும்.

ஒரூரில் வாழும் நகரத்தார் தம் மூர்க் கோயிலை ஒட்டி 'உள்ளூர் நகரத்தார்' என்றழைக்கப்படுவர். பிற ஊர் நகரத்தார்களை 'வெளி யூர் நகரத்தார்' என்பர். அருச் சனை, பூசை, கோயில் விழா முதலிய சிறப்புக்களில் வெளியூர் நகரத்தாரகட்கே முதலிடம் அளிப்பர். பிறகே உள்ளூர் நக ரத்தார் தமக்குரிய 'மர்யாதை யை'ப் பெற்றுக் கொள்வர்.

இங்கு ஒருண்மையை நினைவு கூர்தல் வேண்டும். ஒன்பது நக ரக் கோயில்களும் அதன் இருபத் திரண்டு உட் பிரிவுகளும் நகரக் குடி மக்கள் பிறந்த கால்வழி முறையால் அமைவன. கும்பிடும் கோயிலை வைத்து ஒவ்வொரு கால் வழித் தலைமுறையினரையும் தெளிவாக வகைப்படுத்திக் காட் டும் இம்முறை பிறநாடுகளிலோ, பிற சமூகங்களிலோ இவ்வளவு தெளிவாக உண்டா என்று ஒப் பிட்டுப் பார்க்க வேண்டும். இரு பத்திரண்டு கால்வழிகளும் ஒன் பது பெரும் பிரிவில் அடங்கும். அவ் வொன்பதும் ஒரு பிரிவாய் ஒன்றி, ஒரு புள்ளியிற் போய் நிலை பெறும். ஒரூரில் பல கால்வழி யினர்—பல நகரக் கோயில்களைச் சார்ந்த பரம்பரையினர் வாழ்வர். ஆனல் இவர்களனைவரும் தம்மூர் நகரக் கோயிலின் செயல் முறை கட்கு உட்படும்போது 'உள்ளூர் நகரத்தாராய்' ஒன்றுபட்டு விடு கின்றனர். வேற்றுமையிடையே ஒற்றுமை அமைந்து கிடக்கும் சமூக அமைப்பு முறை இது வாகும். இந்திய நாட்டின் ஒரு மைப்பாட்டிற்கு வழி தேடுவார் இது போன்றதொரு முறையினை ஆழச் சிந்தித்தால் நல்வழி யொன்று பிறக்கக் கூடும்.

ஊர்தோறும் இருக்கும், 'நகரக் கோயில்'தான் அவ்வூர் நகரத் தார்களின் 'அறம் (சட்டம்), ஆட்சி, நீதி'' ஆகிய முத்தரப்பிற் கும் தலைமையிடமாகும். அவ்வூர் நகரத்தார்களனைவரும் அக்கோ யிலைச் சார்ந்த குடிமக்களாவர். தமிழ் ஆண்டுதோறும் அக்கோயி லுக்கு ஒவ்வொரு நகரக் குடியின ரும் தத்தமது வரியாகிய 'பச்சரிசி யும்' 'பணமும்' உரிய விதிப்படி செலுத்தி விடுவர். அரிசி படிக் கணக்கும் ரூபாய்க் கணக்கும் ஊருக்கு ஊர் சிறிது சிறிது கூடு தல் குறைவாக இருக்கும். அக் குடியினருக்குப் 'புள்ளி' என்று பெயர். ஒவ்வொரு நகரக் கோயி லிலும் உள்ள பேரேட்டில் அவ் வூரில் எத்தனை 'புள்ளிகள்' (நகரக் குடியினர்) உள்ளனரோ அத் துணைப் பேருக்கும் புள்ளி விவரம் இருக்கும். அரசினர் எடுக் கும் மக்கட் தொகைக் கணக்கை விடத் தெளிவானது. அவர்கள் தமிழாண்டு தோறும் கோயிலுக் குச் செலுத்தும் காணிக்கைக்குப் 'புள்ளி வரி' என்றுதான் பெயர். புள்ளியாதற்குரியவர்கள் ஆண் பிள்ளைகளேயாவர். பெண்கள் வெளியூர்கட்கும் வாழ்க்கைப்பட் டுப் போவதற்குரியவர்கள் அல் லவா? எவ்வளவு வளர்ந்த, வய தான ஆண் பிள்ளையாயினும் திரு மணம் ஆகும்வரை 'அரைப் புள்ளி' தான். புள்ளிக் கணக்கில் சேர்க் கப்படமாட்டார். திருமணமாகி விட்டாலோ 'அவன் ஒரு புள்ளி' யாகி விட்டான்' என்பர். திருமண மான நாளிலிருந்து அவனும் கோயிலுக்குப் புள்ளிவரி கட்டக் கடமைப்பட்டவனுகின்ருன். இப் புள்ளி வரியிலிருந்து யாரும் தப் பிக்க முடியாது. ஏழை, பணக் காரன் என்ற வேறுபாடு கிடை யாது. பணக்காரன் கோயிலுக்கு வேறு பல நன்கொடைகள் தர

லாம், மண்டகப் படிகள் செய்ய லாம், உபயங்கள் புரியலாம். அது வேறு செய்தி. அவனும் எல்லோரையும் போல—ஏழரைப் படி பச்சரிசியும் ஐந்தேகால் ரூபாயும் என்று அவ்வூரில் விதித்திருந்தால், அதன்படி புள்ளிவரி கட்டி விட வேண்டும். அதுபோல எவ்வளவு ஏழ்மை வந்தாலும் 'புள்ளி வரி' மட்டும் இல்லை என்று சொல்ல முடியாது. ஓராண்டு கட்டத் தவறினால் பிறகு வட்டியோடு கட்ட வேண்டும். 'புள்ளி வரி' கட்டத் தவறுவது கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு வந்தது. எத்தகைய ஏழையாயினும் தமது உடைமையை விற்று வது புள்ளிவரி கட்டி விடுவர். தம் வறுமையை விடக் கோயில் வரி கட்டாமையையே அவமானமாகக் கருதி வந்துள்ளனர். தம் ஊரில் தங்க இயலாமல், வேலை காரணமாகவோ, தொழில் துறை காரணமாகவோ வெளியூர்களிலேயே தங்க நேர்ந்தாலும் அல்லது தொலைதூர நாடுகட்குச் செல்ல நேர்ந்தாலும் தம்மூர் நகரக் கோயில்களுக்குப் புள்ளிவரி கட்ட யாரும் தவறுவதில்லை. தம் உறவினர் மூலமாகவேனும் சொல்லியனுப்பிக் கட்டி விடுவர். அண்மைக் காலம்வரை இந்நடை முறைகள் தவறாமல் பின்பற்றப் பட்டு வந்துள்ளன. ஒருவர் 'வரிப் பாக்கி' உடையவராயிருந்து, திடீரென இறந்து போனால், கோயில் வரியை முற்றிலும் அல்லது கணிசமான அளவு வசூலித்த பிறகல்லது அவரது ஈமச் சடங்குகளில் நகரத்தார் கலந்து கொள்வதில்லை. ஒருவர் கட்டாத வரிப் பாக்கியனைத்தும் அவர் பெயரால் பற்றெழுதப்பட்டு வட்டியுடன் வளர்ந்து கொண்டே வருகிறது. அவர் தவறினாலும் அவரின் வழி முறையினர் இதிலிருந்து தப்ப முடியாது. இறுதிவரை கட்டியே

நகரத்தார் பற்றி

முன்னாள் முதலமைச்சர் கருத்து?

பக்கம் 30

யாக வேண்டும். நகரத்தார்களின் வாழ்வில் எத்தகைய 'மையமான' 'உயிர் நிலையான' இடத்தை இக் கோயில்கள் பெறுகின்றன என்பதற்கு மேலும் சில வாழ்க்கை நடை முறைகளை இங்குச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். அப்போது தான் இக்கோயில்களின் இன்றியமையா இடம் இன்னும் தெளிவாக விளங்கும்.

நகரத்தார்கள் அனைவரும் சமயச் சார்பால் 'சிவநெறிச்' செல்வர்களேயாவர். ஆயினும் திருமால் வழிபாட்டையும் தம் சிவநெறியின் உட் பகுதியாகவே கொண்டனர் என்று தெரிகிறது. சிற்றூர்தோறும் உள்ள நகரக் கோயில்கள் எல்லாம் சிவன் கோயிலாகவே இருப்பதில்லை. இவை முருகன் கோயில்களாகவும் சில ஊர்களில் விளங்கும்; அம்மன் கோயிலாகவும் சிற்சில ஊர்கட்கு அணி தரும்; பெருமாள் கோயிலாகவும் சில ஊர்கட்குப் பெருமை தரும். இக்கோயில் மணியோசை இவர்கள் வாழ்வில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆச்சி மார்கள் இம்மணியோசை கேட்டதும் 'காலைசந்தி' ஆகிவிட்டதே, 'உச்சிக் காலம்' வந்து விட்டதே

சாயலிச்சை மணி' சேட்கிறதே, 'இது என்ன அர்த்த சாமமா?'—என்று காலத்தைக் கணக்கிட்டுக் கொள்வர். மணமகனும் இளைஞன் இக்கோயிலிலே சென்று வழிபட்ட பிறகுதான் மணமாலை சூடி மனைவியைக் கைப் பிடிக்கின்றான். ஓரிளைஞன் மாப்பிள்ளையாகிப் புறப்படும்போதும் மனைவியுடன் திரும்பும்போதும் கோயிலைச் சார்ந்த இடங்களில் தங்கியிருந்து, பிறகுதான் வீட்டிற்கு அழைக்கப் பெறுகின்றான். சிற்றூர் முழுதும் சமய நறுமணத்தைப் பரப்பும் 'பத்தி'யாக இப்பத்தி மிகும் திருக்கோயில்கள் இலங்குகின்றன. ஓங்கியுயர்ந்த கோபுரங்கள் அவ்வூரின் திசைகாட்டி, அருட் கை உயர்த்தித் தம் குழந்தைச் செல்வங்களை வரவேற்கும் 'துருவ வின் மீன்'களாகத் துலங்குகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து கிடக்கும் சமயத்தைப் பிரித்தறிய ஒண்ணாவாறு செய்யும் தொடர்புச் சங்கிலியாய இக்கோயில்கள் இயங்குகின்றன.

இக்கோயிலின் அன்றாடப் பூசை முதல் ஆண்டுப் பெருவிழா வரை நடைபெறுவதற்குச் சீருடைச் செல்வர்கள் மனங்கனிந்து உதவுவதுண்டு. திருவிழாக்களே தமிழர்கள் கண்ட இன்பப் பொழுது போக்கு. சிற்றூர், பல இதனால் 'விழவறாமூதூர்கள் எனப்பட்டன. நகரத்தார்களைப் பொறுத்தவரை இத்திருவிழாக்கள் உள்ளூர் நகர மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றன. வெளியூர் நகர மக்கள் பலருடன் பழகும் வாய்ப்பைத் தருகின்றன. சுற்றந் தழுவுதல், விருந்துபுறந்தருதல், அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல் அனைய அறங்கள் நிகழ இத் திருவிழாக்கள் பெருவாய்ப்புத் தருகின்றன.

ஆச்சிகள் உலகம்

[சென்னை, ராணிமேரி கல்லூரியில் மனையியல் பகுதியின் விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி மங்கை சுப்பையா அவர்களை, குமாரி கமலா அழகப்பன் அவர்கள் சந்தித்தார்கள். அப்பொழுது அவர்கள் கூறியவை.]

தங்களைப் பற்றியும் கணவர் குழந்தைகள் பற்றியும் கூறுங்கள் என்று கேட்டபொழுது.

நான் பிறந்த ஊர் அரிமளம். என் தந்தையார் பெயர் திரு. கணபதி செட்டியார். என் தாயார் பெயர் திருமதி செல்லம்மை ஆச்சி.

என் தந்தை வழிப் பாட்டனார், சைவப் பெரியார் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தெய்வ பக்தி மிக்கவர். அவர்கள் செய்துள்ள தெய்வப் பணிகள் பல. திருநாகேஸ்வரம், திருநீடூர் ஆகிய தலங்களில் கோவில்களைப் புதுப்பித்து, கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். ஆவுடையார் கோவிலில் பசுமடம், நந்தவனம் முதலியவை ஏற்படுத்தியுள்ளார்கள்.

என் அம்மான் மகனையே நான் திருமணம் செய்துகொண்டுள்ளேன். என் கணவர் ஒரு பி. ஏ. பட்டதாரி.

எங்களுக்கு 5 வயதில் ஒரு மகன் இருக்கிறான். அவன் பெயர் ராமு. அவனை 'டான் பாஸ்கோ' பள்ளியில் படிக்க வைத்துள்ளோம்.

நான், சென்னை - திருவல்லிக்கேணியிலுள்ள தேசியப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில், பள்ளி இறுதிப் படிப்பை முடித்துக் கொண்டு, ராணி மேரி கல்லூரியில் சேர்ந்தேன். 1962-ஆம் ஆண்டில் M. Sc. பட்டம் பெற்றேன். அதே கல்லூரியில் அதே ஆண்டு முதல் மனையியல் பகுதி விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறேன்.

பள்ளியில், கல்லூரியில் படிக்கும் நம் சமூகப் பெண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் முன்னேற்றத்திற்குத் தாங்கள் கூறும் யோசனை என்ன?

முன் காலத்தில், நம் சமூகத்தினர் பெண்களைப் பள்ளிகளுக்கு அனுப்புவதே குறைவு. தற்காலம் அப்படியில்லை. அநேகமாக எல்லோரும் தங்கள் பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். நம் பெண்களும் படிப்பில் ஆர்வம் காட்டுகின்றனர்; நன்கு படிக்கின்றனர். இது வரவேற்கத் தக்கது.

பள்ளி ஆசிரியைகளாகவும், கல்லூரி விரிவுரையாளர்களாகவும், டாக்டர்களாகவும் நம் சமூகப் பெண்கள் பணியாற்றுவதைக்

காணும்போது மனம் பூரிப்படைகிறது. இது இன்னும் பெருக வேண்டும் என்பதே என் ஆசை.

நம்மில் ஒரு சிலர், பெண்கள் பருவமடைந்ததும் பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளிவைத்து விடுகின்றனர். ஒரு சிலர், 'இவள் படித்து என்ன செய்யப்போகிருள்? வீட்டு வேலைகளை மாத்திரம் கவனித்துக்கொண்டாலே போதுமானது' என்று நினைத்துப் பள்ளிக்கு அனுப்பாதிருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். பழைய காலத்தையே எண்ணிக்கொண்டிராமல், இன்றைய உலகத்துடன் நாம் ஒன்றிச் செல்லவேண்டும். படிப்புக்கு இடையூறு இன்றி, வீட்டு வேலைகளையும் பார்க்கச் சொல்லலாம்.

நம் பெண்களின் அறிவு பெருக, நம் சமூகத்தின் நிலை உயர, நம் பெண்கள் ஒவ்வொருவரையும் நன்கு படிக்க வைக்கவேண்டியது மிக மிக அவசியம். நகரத்தார் பெண்களில் படிக்காதவர்களே இல்லை என்ற நிலை வரவேண்டும். அதற்கு ஆண்டவன் திருவருள் கிடைக்குமென நம்புகிறேன்.

நம் சமூகத்தில் நடைபெறும் திருமண முறைகள், இன்றைய நிலைக்கு ஏற்றவையா? மாறுதல் வேண்டுமா? அதுபற்றித் தங்கள் கருத்துக்கள் யாவை?

நம் சமூகத்தினர் திருமண விழாவைப் பெரிதாகக் கருதினர்கள். போட்டியிட்டுக் கொண்டு சீர் வரிசை வைத்தார்கள். பத்து நாள் திருமணம்! பணத்தைப் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. பர்மா, மலேயா, செய்கோன், சிலோன் போன்ற நாடுகளில், நம் சமூகத்தினர்களுக்குத் தொழில் வளம் பெருகியிருந்தது; செல்வம் கொழித்தது. நினைத்த மாத்திரத்தில் கடையிலிருந்து பணத்தை வரவழைத்துவிடலாம். அது அந்தக் காலம்.

இன்று நம் சமூகத்தில் திருமணம் ஆகவேண்டிய பெண்கள் நிறைய இருக்கிருர்கள். பெருந்தொகையாக - ஸ்ரீதனம், மாமியார் சாமானுக்குப் பணம், சீர் வரிசைகள் இல்லாமல் கல்யாணம் நடத்த முடியாததே இதற்கு முக்கிய காரணம். காலத்திற்கேற்றவாறும் நம் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீதனம், மாமியார் சாமானுக்குப் பணம், சீர் வரிசை முதலியன இல்லாமல், சிக்கன முறையில் திருமணம் செய்ய முயற்சிக்க வேண்டும். இதற்கு இரு சாராரும் ஒத்துழைக்க வேண்டும்.

அவரவர் தகுதிக்கு ஏற்ப பெண்ணுக்கு நகைகள் செய்து கொடுக்கலாம். வீட்டில் உபயோகப்படுத்தும் அளவுக்குச் சாமான்கள் வாங்கிக்கொடுக்கலாம். (இம்முறைதான் பல சமூகத்தினர்களிடையே பழக்கமாக இருந்துவருகிறது.) இந்நிலைக்கு நம் சமூகம் மாறினல் அநேகமாக நம் சமூகப் பெண்கள் அனைவருக்கும் நிச்சயம் திருமணம் நடந்துவிடும் என்பது என் நம்பிக்கை.

வசதியுள்ளவர்கள் நிறைய சீர் வரிசைகள் செய்வதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுக்கலாம். அப்படிச் செய்தால் பல வழியிலும் நன்மை பயக்கும். சாமான்களை அறையில் போட்டுப் பூட்டி வைப்பதில் என்ன லாபம்? பணத்தை ஏதாவது நல்ல தொழிலில் பங்கிடு செய்தால், வருமானமும் பெருகும்; வாழ்க்கையும் வளமுள்ளதாக இருக்கும். இதற்குத் துணிந்து ஒரு சிலர் முன் வந்தால் மற்றவர்களும் பின்பற்ற ஆரம்பித்து விடுவார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் சுமார் ஏழெட்டு செட்டு சாமான்கள் (ஊருக்கு ஏற்ப,குறைத்தும் கூட்டியும் கொள்ளலாம்) பொதுவில் வாங்கி வைத்து, கல்யாணம் முதலிய விசேடங்களுக்கு வாடகையின்றி இலவசமாகக் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். இம்முறையை நாம் பின்பற்றினுல், கல்யாணம் போன்ற பெரிய விசேடங்களுக்கென அதிகமான சாமான்களை ஒவ்வொருவரும் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பெண்களின் படிப்பும் திருமணமும் நம் சமூகத்தின் இரு கண்கள் போன்றவை. ஒரு பெண்ணை வாழ வைப்பது விளக்கே இல்லாத ஒரு வீட்டில் விளக்கேற்றி வைத்தது போலாகும்.

நம் சமூகப் பெண்களின் வாழ்க்கை முறை பற்றி, உங்கள் கருத்து என்ன என்று கேட்ட பொழுது, இது மிகவும் முக்கியமானது ஆகும். நம் பெண்களில் பலர் இன்னும் பழைய காலத்திலேயே இருக்கிறுர்கள். காலத்திற்கேற்றவாறு நம் வாழ்க்கை முறைகளையும் மாற்றிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். நல்ல வசதியான குடும்பம் ஒன்றில் திருமணம் நடைபெற்றது. பெண்ணும் பையனும், அத்தை மகளும் அம்மான் மகனும்தான். திருமண சமயத்தில் பையன் எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்தான். பெண்ணோ ஐந்தாவதுவரைதான் படித்திருந்தாள். அந்தச் சமயத்தில் இதைப் பற்றி யாரும் எதுவும் நினைக்க இடமே இல்லை. திருமணத்திற்குப் பிறகும் பையன் படித்தான்; பட்டங்கள் பல பெற்றுன்; வெளிநாட்டிற்கும் சென்று திரும்பினுன். அந்தப் பெண்ணோ பழைய நிலையிலேயே



திருமதி மங்கை சுப்பையா

இருந்தாள். அவளைத் தன் நிலைக்கு ஏற்றவாறு திருத்த முயற்சி செய்தும் அந்தப் பெண் திருந்தியபாடில்லை. இந்நிலையில் கணவன் மனைவி உறவு எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? ஆதலால் நம் பெண்கள் காலத்திற்கேற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

நம் சமூகப் பெண்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்பது வள்ளுவர்வாக்கு. 'மங்கையராகப் பிறப்பதற்கே, நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்று கூறியுள்ளார், கவிமணி அவர்கள். 'பெண்ணலன் பெரிதும் பேணுதல் வேண்டும். பெண்ணலன் பேணப்படாத இடத்தில் எவ்வித நலனும் நிலவல் அரிது. ஒரு நாட்டு நலன், அந்நாட்டுப் பெண் மக்கள் நிலையைப் பொறுத்தே நிற்கும்' என்று சொல்லியுள்ளார், திரு. வி. க. அவர்கள். இவ்வளவு பெருமைக்கும் பாத்திரமான ஒவ்வொரு பெண்ணும், அவர்களது தாய், தந்தை, கணவர் முதலியோர் பெருமிதம் கொள்ளும் வகையில் வாழ வேண்டுமென்பதே என் அறிவுரை. அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.



மாணவர் சங்கம்

கல்வி கொடுத்தார் கண் கொடுத்தார்க்கு ஒப்பாவார். ஒளி படைத்த அந்த உதவியினைக் கடந்த பல ஆண்டுகளாகச் சென்னை நகரத்தார் மாணவர் சங்கம் செய்து வருகிறது. அச் சங்கத்தின் பதினான்காம் ஆண்டுச் சிறப்புக் கூட்டமும் மலர் வெளியீட்டு விழாவும் மார்ச்சு திங்கள் இருபத்தொன்றாம் நாள் மாலை நடைபெற்றது. விழா நிகழ்ந்த இடம், 'நியூ உட்லண்ட்ஸ்' உணவு விடுதி.

சங்கத் தலைவர் திரு. சேது லட்சுமணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிற பொழுது மலரின் சிறப்பியல்புகள் குறித்தும், சங்கத்தில் உதவித் தொகை பெற்று, கல்வி பயிலும் மாணவர்களின் உயர்ந்த தன்மைகள் குறித்தும் குறிப்பிட்டார்கள். விழாவிற்கு பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி முதல்வர் டாக்டர் உயர்திரு எஸ். பி. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

இம் மாணவர் சங்கம் பல நற்பணிகளைச் செய்து வருகிறது. முக்கியமாக மாணவர்களிடையே தொடர்பு ஏற்படுவதற்கு இது நல்ல துணையாக அமைந்துள்ளது.

"நான் பச்சையப்பன் கல்லூரியில் ரசாயனத் துறையில் பேராசிரியராக இருந்தபொழுது முன் ஒரு முறை இச்சங்கத்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன். பயன் மிகுந்த இந்தச் சங்கம் மேன்மேலும் வளர்நது வாழ வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று தமது தலைமையுரையில் குறிப்பிட்ட அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களை மலரை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

மலரை வெளியிட்டு உரையாற்றிய அமைச்சர் அவர்கள் பயன் மிகுந்த பல கருத்துக்களை வெளியிட்டார்கள்.

"நகரத்தார் சமூகத்தினர் நடத்தும் மாணவர் சங்கத்திற்கும் நமக்கும் என்ன தொடர்பு இருக்கிறது; நம்மை ஏன் இவர்கள் அழைத்தார்கள் என்று நான் முதலில் நினைத்தேன்; பிறகுதான் அதன் உண்மை தெரிந்தது. நக

ரத்தார் பரபினர் திருவண்ணு மலையில் நிறைந்த அளவில் பல திருப்பணிகளைச் செய்திருக்கிருர்கள். நான் அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்பதனுலேயே என்னை அழைத்திருக்கிருர்கள் என்பதனைத் தெரிந்து கொண்டேன்.

"இச் சங்கம் ஒரு மரபினரின் பெயரைக் கொண்டு இயங்குவதால் குறுகிய நோக்கம் உடையது என்று சிலர் நினைக்கக்கூடும். 'வரப்புயர, நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் கோன் உயரும்; கோன் உயரக் குடி உயரும்.' என்பதற்கேற்ப ஒவ்வொரு மரபினரின் வளர்ச்சியில் நாட்டின் வளர்ச்சியும் அடங்கியிருக்கிறது.

"இச் சங்கத்தின் மூலம் பல மாணவர்கள் உதவித் தொகை பெற்று கல்வி கற்று வருகிருர்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். இச் சங்கத்திற்கு என் உதவி என்றும் உண்டு. நகரத்தார் கலைக் கழக ஆண்டு விழாவில் முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணுநிதி அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தார்கள் என்பதையும், நல்லாதரவு தர உடன்பட்டார்கள் என்பதையும் அறிந்து மகிழ்ந்தேன். எங்கள் இருவருடைய ஆசியும், அன்பும் என்றென்றும் உங்களுக்கு உண்டு"

மேலும் அவர்கள் உரையாற்றுகையில், மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்வதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

"கல்வி கற்கின்ற ஆண்டுகளில் அவர்கள் கல்வியிலே முழு கவனம் செலுத்தவேண்டும். அறிஞர் அண்ணு அவர்களுடைய தலையாய கொள்கையான "ஆங்கிலமும் தமிழும், என்ற இரு கொள்கையில் இந்த அரசு என்றும் உறுதி உடையதாக இருக்கும்" என்று கூறி அவர்கள் தொழிலாளர்நலம் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

தொழிலாளர்கள் நலத்திலும், அதே சமயம் தொழிலை நடத்துகிறவர்கள் நலத்திலும் இந்த அரசு மிக்க அக்கரையுடையதாக இருக்கிறது. வெளி மாநிலங்களில் உள்ள தொழில் அதிபர்களை தமிழ்நாட்டில் வந்து தொழில் செய்யுமாறு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்பதையும் குறிப்பிட்டார்கள்.

உயர்திரு பெரி. அரு. அருணுசலம் செட்டியார் அவர்கள், குழந்தைக் கவிஞர் உயர்திரு அழ. வள்ளியப்பா அவர்கள், உயர்திரு எம். வி. எம். அழகப்பன். எம். ஏ, அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்திச் சிறப்பித்தார்கள்.

சங்கச் செயலாளர் திருமதி உமையாள்முத்து அவர்கள் நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது.

பரிசுகள்

குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்குச் சத்துள்ள உணவுகள் இன்றியமையாதவை. அதுபோல, அவர்களின் மன வளர்ச்சிக்குப் பயனுள்ள நூல்கள் பல தேவை.

இதனை நன்கு உணர்ந்த நம் மத்திய மாநில அரசுகள், ஆண்டுதோறும் குழந்தை இலக்கிய நூல்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து பரிசுகள் நல்கிச் சிறப்பித்து வருகிருர்கள்.

இந்த ஆண்டு மத்திய அரசினர் குழந்தை இலக்கியத்துக்கென்று கொடுத்த பரிசுகளில் தமிழகம் ஒரு பரிசிலைப் பெற்றிருக்கிறது. அப்பெருமைக்குரிய நூல் 'சித்திர ராமாயணம்' ஆசிரியர். வாணெலி

பொறுத்தது மட்டுமல்ல. அந் அண்ணு (ர. அய்யாசாமி) அவர்கள் வெளியிட்டோர்: புக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை—1. விலை ரூ. 12.

சித்திர ராமாயணம், வானொலி நிலையம், பாப்பா மலரில் ஒலிபரப்பப்பெற்று தமிழகத்துக் குழந்தைகள் உலகத்தை மட்டுமல்லாமல் பெரியவர் உலகத்தையும்கவர்ந்து நிலையான இடம் பெற்றது.

வண்ண மலர்கள் பல சேர்ந்த மண மாலையைப் போல, வண்ணப் படங்கள் பல இடம் பெற நூல் உருவாக்கப் பெற்றிருக்கிறது.

உலகப் பெருங் காப்பியமான ராமாயணம் சிறுவர் உலகத்திற்கேற்ற முறையில் சித்திர ராமாயணமாக வந்திருப்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியது.

மாநில அரசினர் நான்கு நூல்களுக்குப் பரிசுகள் வழங்கி உள்ளார்கள். நூல் ஒன்றுக்குப் பரிசுத் தொகை ஐநூறு ரூபாய்.


ஒன்று :

நூலின் பெயர் : பிள்ளைப் பருவத்திலே
ஆசிரியர் : குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.
வெளியிட்டோர் : குழந்தைப் புத்தக நிலையம்,
விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை—1.

விலை ரூபாய் இரண்டு.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடுகாக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்.

என்று குழந்தைக் கவிஞர் அவர்கள் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். உலகில் பல்வேறு பகுதி



அழ. வள்ளியப்பா

களில் நாடுகாக்கும் தலைவர்களாக வாழ்ந்த பெரு மக்கள் ஏடு தூக்கிப் பள்ளிக்குச் சென்ற காலத்தில் அவர்கள் வாழ்க்கையில் நடந்த பொன்னன முப்பது நிகழ்ச்சிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அந்த முப்பது பெருமக்களும் எப்போது பிறந்தார்கள் என்ற குறிப்பு நூலில் இடம் பெறறிருப்பது பெரும் பயன் தருவதாகும். ஒவ்வொருவர் நிகழ்ச்சிகளிலும் படங்கள் இடம் பெற்று புத்தகத்தின் வனப்பை மிகுதியாக்கியுள்ளன. கவிஞரின் எளிய இனிய நடை நூல் எங்கும் நிறைந்து சுவை சேர்க்கிறது.

இரண்டு :

நூலின் பெயர் : இந்திராகாந்தி
ஆசிரியர்: எம். வி. வெங்கட்ராம்
வெளியிட்டோர் : பழனியப்பா பிரதர்ஸ் சென்னை—14.
விலை ஒரு ரூபாய் ஐம்பது காசுகள்

நாட்டின் வளம் அந்நாட்டிலே கிடைக்கும் பொருள்களைப்

நாட்டு மக்களை வழி நடத்திச் செல்லுகின்ற வழிகளைப் பொறுத்ததேயாகும். கல்வி, சமயம், பொதுத்தொண்டு, ஆட்சி இத்துறைகளில் ஆட்சித் துறையை ஏற்பவர்க்கே மிகுந்த பொறுப்பு இருக்கின்றது. ஏனென்றால் அத்துறையைப் பொறுத்தே ஏனைய துறைகளின் இயக்கம் இருக்கிறது. நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பினைத் திறம்பட நிர்வகித்து வருகிறார். அவர்கள் பொறுப்பினை ஏற்றதன் மூலம் நம் தாய்க்குலமே பெருமை பெற்றுள்ளது. இந் நூலில் அவர்களுடைய வரலாறு தெளிவாகவும், செம்மையாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இடை இடையே இடம் பெற்றுள்ள படங்கள் நூலை சிறப்புடையதாக ஆக்குகின்றது. குழந்தை இலக்கிய உலகிற்கு வரலாற்று நூல்களும் பெரும் பயன் தரத்தக்கது என்பது இந்நூல் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

மூன்று:

நூலின் பெயர் : பூனையார்

ஆசிரியர் : ரத்னம்

வெளியிட்டோர் : பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை—14.

விலை 90 காசுகள்.

நூல் விற்பனை நிலையங்களில் வண்ண வண்ணமான படங்களோடு கண்ணைக் கவர்கின்ற அமைப்புகளில் காட்சிதருகின்ற ஆங்கிலப் புத்தகங்களைப் பார்க்கும் போதெல்லாம் இது போன்ற நூல்கள் நம் நாட்டில் என்று வெளிவருமோ என்று எண்ணத் தோன்றும். இந்தக் குறையை நிறை செய்கின்ற முறையில் இந்த நூல் அமைந்துள்ளது.



ரத்னம்

பூனை ஒன்று உட்கார்ந்திருக்கின்ற முறையிலேயே புத்தகம் உருவாக்கப்பெற்றுள்ளது. இந்த நூலுக்கு நாயகன் ராஜி என்ற பூனைதான். மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லப்பெற்றுள்ள இந்தப் பூனையின் கதை திருடுவது தவறு என்பதை மிகத் தெளிவாக விளக்குகிறது.

பக்கங்கள் தோறும் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ள பூனையாரின் படங்களே கதை சொல்வனவாக அமைந்துள்ளன. மிகச் சிறந்த முயற்சி குழந்தை இலக்கிய உலகத்திற்கு நல்லதொரு செல்வம். இந்நூலாசிரியர் ரத்னம் அவர்களின் இயற்பெயர் அழ. அழகப்பன் அவர்கள். குழந்தை எழுத்தாளர் சங்கப் பொருளாளர் ஆகவும், செயற்குழு உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்கள் என்பதும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் யார் எவர் தொகுப்பு நூலின் தொகுப்பாசிரியர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

நான்கு:

நூலின் பெயர்: பூமி அன்னை
ஆசிரியர்: பா. குணசேகர்
வெளியிட்டோர்: சிறுவர் இலக்கியப் பண்ணை
அசோக் நகர், சென்னை—33.
விலை ரூபாய் ஒன்றரை

விஞ்ஞானப் புதுமைகளால் ஏற்படுகின்ற பயன்கள் இன்று நம் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிட்டது. எனவே விஞ்ஞான நோக்கில் ஒவ்வொன்றையும் பார்ப்பது மிகமிக இன்றியமையாததாக இருக்கிறது. எனவே விஞ்ஞானத்தின் சிறப்புகளையும் உண்மைகளையும் நன்மைகளையும் குழந்தைப் பருவத்திலிருந்தே தெரிந்துகொள்வது அறிவு வளர்ச்சிக்கும் நாட்டு முன்னேற்றத்துக்கும் துணை நிற்கும். ஆசிரியர் பூமியின் பல்வேறு தன்மைகளையும் வியக்கத்தக்க பல செய்திகளையும் கூறி அன்னைகளுக் கெல்லாம் அன்னைதான் என்பதை நிலை நாட்டி உள்ளார். புத்தகம் செம்மையாகவும் சிறப்பாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

நகரத்தார் பற்றி
முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம்

'திரை கடல் ஓடியும் திரவியம் தேடும்' நாட்டுக்கோட்டை நகரத்துப் பெருமக்கள், எங்கெங்குச் சென்றாலும் அங்கங் கெல்லாம் தரும கைங்கரியங்களை மிகுதியாகச் செய்து, நமது தமிழ்ப் பண்பாட்டையும் இந்து சமயத்தையும் வளர்த்துப் போற்றி வரும் சிறப்பியல்பு பெரிதும் உடையவர்களாகத் தோன்று தொட்டுத் திகழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் செய்துள்ள கோயில் திருப்பணிகளும், ஏற்படுத்தியுள்ள எத்தனையோ பல அறக் கட்டளைகளும் எண்ணில் அடங்காதவையாகும்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

எனத் திருவள்ளுவர் கூறியதற்கு ஏற்ப, ஒல்லும் வகையானெல்லாம் அறவினைகள் செய்து மகிழும் நல்லியல்பு மாட்சிமையும், நகரத்தார்கள் பால் சிறந்து காணப்படுகின்றன.

வங்கித் தொழில்

என். முத்தையா B.Com. C.A.I.I.B

திரு. முத்தையா அவர்கள் கோட்டையூரைச் சேர்ந்தவர்கள். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பி. காம் கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள். நான்கு ஆண்டுகள் ஆயுள் காப்புக் கழகத்தில் (Life Insurance Corporation) பணிபுரிந்த அவர்கள் கடந்த பத்தாண்டுகளாக இந்தியன் பாங்கியில் பணியாற்றி வருகிறார்கள். ஆர்வமும் துடிப்பும் அன்பும் பண்பும் கொண்ட இளைஞரான அவர்கள் இப்பொழுது இந்தியன் பாங்கி தேனாம்பேட்டைக் கிளையில் ஏஜெண்டாகப் பணி புரிந்து வருகிறார்கள்.

இங்கிலாந்து நாட்டிலே "கோல்டுஸ்மித்" என்பவர்கள் எவ்வாறு தற்கால பாங்கு முறைக்கு முன்னோடிகளாக இருந்தார்களோ அதே போல நம் இந்திய துணைக் கண்டத்திலும் முக்கியமாக தென்னிந்தியாவில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தற்கால பாங்கு முறைக்கு முன்னோடிகளாக இருந்தார்கள் என்றால் மிகையாகாது. தற்சமயம் இந்திய அரசாங்கம் பாங்குகள் மீது சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் பல துறைகளுக்கு பாங்கு கடன் உதவி செய்யும் திட்டத்தை நகரத்தார் சமூகம் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே சாதித்திருக்கிறது. உதாரணமாக இன்று அரசாங்கம் விவசாயத் துறைக்கும் அந்நிய வர்த்தகத் துறைக்கும் பாங்குகள் கடன் கொடுக்கவேண்டும் என வற்புறுத்துகிறது. இதை பல வருடங்களுக்கு முன்னமேயே நகரத்தார்கள் தங்களது உள் நாட்டு பாங்குத் தொழில்மூலம் செய்திருக்கிறார்கள். பர்மா, மலேயா, சிலோன், செய்கோன் முதலிய நாடுகளில் அந்த நாடுகளின் பொருளாதார நிலை உயர விவசாயத்திற்கு கடனுதவி செய்து பாழ் நிலங்களாக இருந்த பூமியை பயனுள்ள நெல் விளை நிலங்களாகவும், ரப்பர்த் தோட்டங்களாகவும் தேயிலைத் தோட்டங்களாகவும் மாற்றி இன்று முக்கியமாக கருதப்படும் அந்நியச் செலாவணியை ஈட்டியிருக்கிறார்கள். இவைகளை நினைக்குந் தோறும் நாம் பெருமை யடையாமல் இருக்கமுடியாது. பழம் பெருமை பேசித்திரிவதில் என்ன பலன் என சிலர் நினைக்கக் கூடும். ஒருவருடைய சுயசரிதத்தை அவருடைய பெருமைகளை மட்டும் தெரிந்து கொள்வதற்காக நாம் படிப்பதில்லை. ஆனால் எவ்வாறு வாழ்ந்தார். அவரைப் போல் வாழவேண்டுமானால் எவ்வாறு நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்

வதற்கே நாம் சுய சரிதங்களைப் படிக்கிறோம். அதே போல் அன்றைய நகரத்தார்களின் தொழில் பெருமையை அறிந்து கொண்டால் இன்றைய வாழ்க்கைக்கேற்ப அவர்கள் செய்து வந்த தொழில்களை எவ்வாறு மாற்றிக் கொள்ளலாம் என்று நாடுஅறிந்து கொள்ள முடியும்.

நகரத்தார்கள் வியாபாரத்தைத் தான் முக்கிய தொழிலாக கொண்டிருந்தார்கள். அதிலும் முக்கியமாக பர்மா கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து தானியங்கள், மற்ற சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தார்கள். வியாபாரத்திலிருந்து கொண்டே தான் பலரும் போற்றத்தகுந்த உள்நாட்டு பாங்கு தேவையைக் கைக் கொண்டார்கள். நகரத்தார்களுடைய பாங்கு முறைக்கு ராசா சர் அண்ணாமலை செட்டியாருக்கு ரங்கூன் நகர மக்கள் அளித்த வரவேற்பை எடுத்துக் கூறிய கீழ்கண்ட வார்த்தைகளே எடுத்துக் காட்டு ஆகும்.

"...It is a Tribute to the upright system of Chettiar banking and money lending that no other system of finances has yet been evolved which is capable of giving to agriculture and business of the Province the imputus and stability which Chettiars have acheived.

இந்திய அரசாங்க நிதி இலாகா காரியதரிசியாக இருந்த M. M. Gublany C.S.I., C.I.E. அவர்களது வார்த்தைகளும் இங்கு கவனிக்கற்பாலது.

" A special type of indigenous bankers is that of the Chettiar Communi y in Madras. Account

can be maintained with these Chettiar Bankers on which operations by cheques all permissable and funds lie with them on time deposits at rates much above those which are available from other banks. I see no reason to doubt......that their participation in the financial life of the community are whole must be on a very extendive scale. Further they are in intimate daily touch with those with whom they transact business......They must be accumulated with these private bankers a store of knowledge and experience of the standing, moral as well as financial and Capacity of individual Indian traders and Indian banking firms, their business connections and relations on which, if fully organized and systematized, might possibly quite suitably rest on expansion of credit facilities from the banks."


மேற் குறிப்பிட்ட வாசகமே நகரத்தார்கள் எவ்வளவு திறமையாக உள் நாட்டு பாங்கு தொழிலை நடத்தி வந்தார்கள் என்பதற்கு சான்ருகும்; அக்கால பாங்கு செய்முறையை முழுதும் விவரிப்பதென்ருல் இந்தக் கட்டுரைக்குள் அடங்காது. முக்கியமாக நகரத்தார்கள் பாங்கு முறை திறமையாகவும் லாபகரமாகவும் இருந்ததற்குக் காரணங்கள் நாணயமும் சிக்கனமுமாகும். தற்கால பாங்குகளில் இருக்கும் ஏஜெண்ட் முறையே, நகரத்தார்களின் உள் நாட்டு பாங்குகளில் ஏற்பட்ட ஏஜெண்ட், அடுத்த ஆள் என்ற முறையிலிருந்து உருவானதாகும்.

உள் நாட்டு பாங்கு முறைக்கு இந்த அளவு செய்திருக்கும் நகரத்தார்கள் தற்காலிக கூட்டுப் பொறுப்பு பாங்கு முறைக்கும் தென்னிந்தியாவில் ஏராளமாக செய்திருக்கிறது. ராசா சர் அண்ணமலை செட்டியார் அவர்கள் ஆரம்ப காலத்தில் 'செட்டி நாடு பாங்க்' என்று ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினுர்கள். தற்சமயம் இந்தியன் பாங்க், இந்தியன் ஒவர்சிஸ் பாங்க், பாங்க் ஆப் மதுரை, பாங்க் ஆப் காரைக்குடி முதலிய பாங்குகள் தற்கால பாங்கு முறையில் நகரத்தார்கள் கொண்டுள்ள பங்கை எடுத்துக் காட்டுகிறது. இந்த நிறுவன குழுக்களில் பணியாற்றும் ராசா சர் குடும்பத்தினர், மு. சித. குடும்பத்தினர், கருமுத்து குடும்பத்தினரும் மற்ற நகரத்தார் சமுகத்தினரும் நாட்டுக்கொரு நல்ல பணியைச் செய்து வருகின்றனர்.

வருங்காலத்தில் செட்டி நாட்டு அரசர் முத்தையா செட்டியார் அவர்கள் கருத்துப்படி உள்நாட்டு பாங்கு முறைக்கு நல்ல எதிர் காலம் இருக்கிறது. நிதி மிகுந்தவர்கள் நம்முடைய மூதாதையர் தொழிலைக் கைவிடாமல் கிராமங்களில் நல்ல முறையிலே தொழில் நடத்தி வரலாம். படித்தவர்கள் கூட்டுப் பொறுப்பு பாங்குகளில் சேர்ந்து முன்னுக்கு வரலாம். எவ்வாருயினும் முன்னேேர்களின் தொழில் நசிந்து விடாமல் பார்த்துக் கொள்வது இக்காலச் சந்ததியினரின் கடமையாகும்.

★

செய்தி மலர்



● பத்மஸ்ரீ உயர்திரு ஆ. நாகப்ப செட்டியார் அவர்கள் தோல் ஏற்றுமதி வாணிபம் தொடர்பாக 12-5-69—ஆம் நாள் மேல் நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் உள்ள பல தொழில் நிறுவனங்களுடனும் அரசினர்களுடனும் தொடர்பு கொண்டு ஜூலை மாதத் தொடக்கத்தில் அவர்கள் தாயகம் திரும்ப உள்ளார்கள்.

● கருவிலே திரு உடையவர்களாக விளங்குகின்ற பேற்றினை எல்லாரும் பெறுவதில்லை. அந்தப் பேற்றைப் பெற்றவர்களாக உயர்திரு எம். எம். முத்தையா அவர்கள் விளங்குகிறார்கள்.

சென்ற இரண்டு ஆண்டுகளாக, தமிழ் நாடு தோட்ட உரிமையாளர் சங்கத் தலைவராகவும் (Chairman, Association of planters of Tamil Nadu) சென்னைப் படகுச்சங்கத்தலைவராகவும்(President, The Madras Boat Club) உள்ள அவர்கள் ஓர் எம். ஏ. பட்டதாரி. கார்பொராண்டம் யூனிவர்சல் லிமிடெட், நியூ அம்பாடி எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனங்களின் நிர்வாகத் தலைவரான இவர்கள் பல பெரும் தொழில் நிறுவனங்களின் இயக்குநராக உள்ளார்கள். சிறப்பு மிக்க பல்வேறு பொழுது போக்கு, விளையாட்டுச் சங்கங்களின் உறுப்பினராகவும் உள்ளார்கள். முருகப்பச் செட்டியார் நினைவு பல்தொழில் பள்ளியின் கூட்டுத் தொடர்பாளராகவும் (Joint Corresrondent, Murugappa Chettiar Memorial Polytechnic) அ. மு. மு. அறக்கழகத்தின் காப்பாளராகவும் இவர்கள் விளங்குகிறார்கள்.

இத்துணை பொறுப்பு மிக்க பணிகளுக்கிடையேயும் படகு


ஓட்டுதல், டென்னிஸ் ஆடுதல், புகைப்பட மெடுத்தல், முதலிய பழக்கங்கள் உடையவர்களாகவும் இதற்கெல்லாம் மேலாக யோகாசனப் பயிற்சியில் ஈடுபாடு உடையவர்களாகவும் விளங்குகிறுர்கள் என்பது வியப்பிற்கும், சிறப்பிற்கும் உரிய செய்திகள்.

தொழில் நிறுவன நிர்வாகம் (Company Management) இவர்களுக்கு மிகவும் பிடித்தமான துறையாகும். இவர்கள் காலஞ்சென்ற தொழில் அதிபர் அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்களின் திருப்புதல்வர்.

● பிலிம் பேர் நிறுவனத்தினர் 1968—ஆம் ஆண்டிற்கு நடத்திய திரைப்படப் போட்டியில் தமிழ்ப் படத்திற்குரிய பரிசினை ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் அளிக்கும் கிருஷ்ணலயாவின் லக்ஷ்மி கல்யாணம் பெற்றிருக்கிறது. 26-3-69—ஆம் நாள் பம்பாயில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உயர் திரு ஏ. எல். சீனிவாசன் அவர்கள் கலந்து கொண்டு பரிசினைப் பெற்ருர்கள். இப்படத்தின், கதை, வசனம், பாடல்கள் கவிஞர் கண்ணதாசன் அவர்கள். இயக்குநர் ஜி. ஆர். நாதன் அவர்கள்.

● சென்னையில், புகழ் பெற்ற நிறுவனங்களில் ஒன்று. பி. ஆர். அன் சன்ஸ். அந்தப் பெரிய நிறுவனத்தை இப்பொழுது நிர்வகிப்பவர் இருபத்தாறு வயதே நிரம்பப் பெற்ற இளைஞர். இந்த வயதில் அவர் கற்றிருக்கும் கல்வியும் பெற்றிருக்கும் அனுபவமும் மிகவும் சிறப்புடையனவாகும்.

அமெரிக்காவில் மின்சாரப் பொறியியலிலும் (Electrical Eng-ineering) பொறியியல் நிர்வாகத்திலும் (Engineering Admi-nistration) பி. எஸ். (B. S.) பட்



டம் பெற்றவர்கள். மிக்சிகன், கலிபோர்னியா பல்கலைக்கழகங்களில் பயின்றவர்கள். அந்நாட்டில் கல்வி பயின்றதோடு புகழ் பெற்ற போர்டு மோட்டார் கம்பெனியில் பணிபுரிந்தவர்கள். மிக்சிகன் மாநிலத்தில் டெட்ராய்டில் உள்ள புகழ் மிக்க, ஜெனரல் மோட்டார் கார்பொரேஷனின் செவர்லட் செனிரல் (Chevrolet Ceuyral) அலுவலகத்தில் தொழில் நிர்வாகப் பயிற்சி பெற்றவர்கள். ஏழு ஆண்டு அமெரிக்க வாழ்க்கைக்குப் பின், பத்து மாதங்கள் ஸ்வீடன் நாட்டில் தங்கி, அந்நாட்டு அரசியல் முறையோடு, இந்திய அமெரிக்க அரசியல் முறைகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து வந்துள்ளார்கள். 1968—ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் பி. ஆர். அன். சன்ஸ் நிர்வாக இயக்குநர் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். அவர்கள் வேறு யாருமல்ல; கலைத் தந்தை உயர்

திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் பேரனும் உயர்திரு தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வருமான திரு. எஸ். சொக்கலிங்கம் அவர்களே.

● உயர்திரு முரு. மு. ராம. ராமசாமிச் செட்டியார் அவர்கள், காலேஜ் ரோடு 14-A, இலக்கத்தில் அமைத்த தமது புதிய இல்லத்தின் புதுமனை புகுவிழாவினை ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் கொண்டாடினார்கள். அவ்விழாவிற்கு உயர்திரு செட்டிநாட்டரசர் அவர்கள், தொழில் பிரமுகர் உயர்திரு மருதைப் பிள்ளை அவர்கள் மற்றும் பல வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகப் பிரமுகர்கள் பெருமக்கள் பலரும் வந்து சிறப்பித்தார்கள். கட்டிடம் மேல் நாட்டு அமைப்பில் கவர்ச்சி மிகுந்ததாகவும், வசதி நிறைந்ததாகவும் விளங்குகிறது. ராமசாமிச் செட்டியார் அவர்கள் தோல் உற்பத்தி, ஏற்றுமதி வாணிபத்தில் குறிப்பிடத்தக்க சிலருள் ஒருவராகத் திகழ்கின்றார்கள். அவர்களுடைய ஊர் கொப்பனாபட்டி.

● வாணிபத்தில் அக்கரை மிகுந்த நாம் நிறுவனங்களில் - குறிப்பாக அரசினர் நிறுவனங்களில் பணிபுரிவதை ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்வதில்லை.

ஏற்றுக்கொண்டால், அத்துறையிலும் மிகச் சிறந்து விளங்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள் முப்பத்து நான்கு வயது இளைஞர் அழகப்பா அருணாசலம் அவர்கள்.

அவர்கள் வருமானவரித் துறை சென்னை அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாகவும், வருமான வரி அதிகாரியாகவும் (Admiistrative officer Pilot Unit III and



Income Tax Officer, Company Circle II (1) Madras) பணியாற்றுகிறார்கள். சென்னை மாநிலக் கல்லூரியில் வரலாற்று எம். ஏ. கல்வி பயின்று 1954 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திலே முதல் மாணவராக வெற்றிபெற்ற பெருமை இவர்களுக்கு உரியது. பயின்றவுடன் சிலகாலம் பணிபுரிந்த இடம் புது டில்லியில் உள்ள உலக விவகார இந்தியக் கழகம். (Indian Council of World Affairs). இந்திய வருவாய்ப் பிரிவில் (Indian Revenue Service முதல் வகுப்பு வருமான வரி அதிகாரியாகச் சேர்ந்த ஆண்டு 1959. ஆராய்ச்சிப் பட்டம் (Ph. D.) பெறுவதற்காக 1965-ம் ஆண்டு அமெரிக்கா சென்று எட்டு மாத காலம் தங்கி ஆராய்ச்சிக் குறிப்புகள் எடுத்து வந்துள்ளார்கள். இன்னும் ஓர் ஆண்டில் அந்தப் பட்டத்தினைப்பெறும் நல்வாய்ப்பு உண்டு.

சகோதரர்கள் இருவர். ஒருவர் நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றும் டாக்டர்

அழகப்பன் அவர்கள். மற்ருெருவர், ஹைதராபாத்தில் இந்திய நிர்வாக அதிகாரியாக (I. A. S.) பணி புரியும் வள்ளியப்பன் அவர்கள்.


ஊர்: கானுடுகாத்தான்.

● மேலைச்சிவபுரி சுப்பிரமணிய சுவாமி மஹேஸ்வர பூசை விழா சித்திரைத் திங்கள் பத்தொன்பதாம் நாள் (1-5-69) வியாழக்கிழமை சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது விழா நிகழ்ந்த இடம்:-செல்வ விநாயகர் கோவில் முன்பு அமைக்கப் பெற்றிருந்த எழிலரங்கம். விழாவில் ஐயாயிரத்துக்கும் மேலாக அன்பர்கள் கலந்து கொண்டு, உணவு உண்டு முருகன் அருள் பெற்றனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விழா நடைபெற்றது.

● சென்னை நுங்கம்பாக்கம் 13-A, காலேஜ் ரோட்டில் பெட்ரோல் விற்பனை செய்துவரும் பால்ஸ் ஆட்டோ சர்வீஸ் (Pals Auto Service) என்ற நிறுவனத்தினர் அண்மையில் சர்வீஸ் ஸ்டேஷனையும் அங்கு தொடங்கியுள்ளனர். இதன் உரிமையாளர் பழனியப்பா பிரதர்ஸ் சோம. பழனியப்பச் செட்டியார் அவர்கள்.

● செண்பகம் பேட்டை பெரிய கருப்பசாமி கோயில் குடமுழுக்கு விழா வைகாசித் திங்கள் ஒன்பதாம் நாள் (22-5-69) நடைபெறவிருக்கிறது. திருப்பணியாளர் வலையபட்டி வ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

● உயர்திரு சுப. அண்ணுமலை அவர்கள் "இராமலிங்க வள்ளலார்" பாடல்களை அடித்தளமாகக் கொண்டு, மிகச்சிறந்த ஆய்வு நூலை (Thesis) அளித்து அண்மையில் சென்னை பல்கலைக்கழகத்தில்



டாக்டர் பட்டம் பெற்றிருக்கிருர்கள் என்பது பெரும்சிறப்பிற்குரியதாகும். சென்ற ஆண்டு முதல் கலைத் தந்தை கருமுத்துத் தியாகராசச் செட்டியார் அவர்களின் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிருர்கள். இளமையிலேயே சிறந்த பதவியையும், உயர்ந்த பட்டத்தையும், இவர்கள் பெற்றிருப்பது பெருமைக் குரியதும், குறிப்பிடத்தக்கதும் ஆகும். இவர்கள் தேவகோட்டையைச் சேர்ந்தவர்கள்.

● அமெரிக்காவில் சின்சினுட்டியில் உள்ள, செயின்ட் சேவியர் பல்கலைக் கழகத்தில், ரசாயனக் கல்வியில் உயர் பட்டம் (M. S. in Analytical chemistry, St. Xavi-er's University, Cincinnati, U. S. A.) பெற்ற, பழ. காந்திஅவர்கள் அந்நாட்டிலேயே ஒரு மருத்துவ மனையில் பணி புரிகிருர்கள். மருந்து தயாரிக்கும் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் கூட்டுறவுடன் இந்தியாவில் தயாரிப்பு நிறுவனம்



ஒன்றைத் தொடங்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் புகழ்பெற்ற புத்தக வெளியீட்டு நிறுவனமான பழநியப்பா பிரதர்ஸ் உரிமையாளர். சோம. பழநியப்பச் செட்டியார் அவர்களின் புதல்வர். ஊர்: ராயவரம்.

● கீழச்சிவல்பட்டி உயர்திரு. அரு. சுப்ரமணியம் செட்டியார் புதல்வர் திருநிறைச் செல்வர் அருணசலம் B. Com. அவர்களுக்கும் அந்நகர் உயர்திரு. கரு. மு. கரு. சருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வி வள்ளியம்மை அவர்களுக்கும் வைகாசித் திங்கள் 9-ஆம் நாள் (22-5-'69) திருமணம் நடைபெற இருக்கிறது. மணமகனின் தந்தையார் புதுக்கோட்டை செந்தமிழ்ப் பதிப்பகம் என்ற அச்சு நிறுவனத்தின் பொறுப்டாளர் ஆவார்கள்.

பக்திக்குத் தானு பணத்தைச்
செலவழித் தோம்
பகுத்தறிவுக் கோயில்களாம்
பள்ளிகளும் நாம்
சமைத்தோம்

கவிஞர் கண்ணதாசன்

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் பணிபுரிகின்ற

திரு. சுப. திண்ணப்பன் அவர்கள்

M. A., M Litt. Dip in Ling

அடுத்த இதழில் எழுதுகிறார்கள்.

பொருள்

நகரத்தார் கடிதநடை